

# ரமணோதயம்

அக்டோபர் 2018

காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்

விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து உதவுமாறு
கேட்டுக் கொள்கிறோம்.

உதயம் 18 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்
அக்டோபர் 2018

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2018


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 14 |
| 3 | ஔவைக் குறள் | | 29 |
| 4 | ரமணாயனம் | க்ரேஸி மோஹன் | 33 |
| 5 | அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம் பகுதி 12 | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 38 |
| 6 | கோவணம் தரித்த ஞானக் கோமகன் | கௌதமன் | 46 |
| 7 | சுவாமி ரமணகிரி | வி. நிரஞ்சன் | 52 |
| 8 | இனிவரும் திருநாட்கள் | | 64 |
| 9 | ரமண மையங்களை நோக்கி தொடர் கட்டுரை | | 65 |
| 10 | செய்திகள் | | 73 |

# ஆசிரியர் உரை

## தானாய் நிகழ்ந்த ஓவியம்

அத்வைத வேதாந்தத்தில் கூறப்படும் பிரசித்தி பெற்ற உவமை 'கயிறும் பாம்பும்' என்பதாம். குறைந்த வெளிச்சத்தில் கயிறைக் காணும்போது அதைப் பாம்பாக எண்ணிக் கொள்கிறோம். முன்பே நாம் பாம்பைக் கண்டு உள்ளோம்; கயிறையும் கண்டு உள்ளோம். ஆயினும் அரை இருள் ஏற்படுத்திய மயக்கத்தால் கயிறைப் பாம்பாகக் கருதிக் கொள்கிறோம். இந்த மயக்கம் ஏற்படுவதற்குத் தேவை முன்பே பாம்பினைக் கண்டு இருக்கவேண்டும்; கயிற்றையும் கண்டு இருக்கவேண்டும். அந்தக் குறிப்பிட்ட வேளையில் பூர்ண ஒளி இல்லாமல் அரை இருள் பரவி இருக்கவேண்டும். அப்போது இந்த அத்யாஸம் எனப்படும் தவறான அடையாளம் காண்கிறோம். பூர்ண வெளிச்சம் வரும்போது கயிறைப் பாம்பென எண்ணும் தவறான அடையாளம் நீங்கி மெய்யறிவு ஏற்படுகிறது.

நாம் நம்மை உடம்பென்று எண்ணிக் கொள்வதும் இத்தகைய ஒரு மயக்கமே; நாம் மனம் என்று எண்ணிக் கொள்வதும் மயக்கமே. உடலுக்கு உணவு, உடை தேவைப்படுகிறது. மனத்தின் தேவையோ இதைவிட அதிகம். உடலின் தேவை பௌதிகமான உணவு, உடை, உறையுள். மனதின் தேவையோ இதைவிட அதிகம். மனம் ஆசையினால் தூண்டப்படுகிறது. தன்முனைப்பு கொண்டு செயலில் ஈடுபடுகிறது. அதனால்

*கர்மச் சுழலில் சிக்கிக் கொள்கிறது. ஆசையினால் தூண்டப்பட்ட செயல்கள் இன்பதுன்பங்களை உருவாக்குகின்றன. புத்தர் 'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என்றார். பகவான் ரமணரோ இதனைத் தாண்டி, ஆசை எங்கிருந்து எழுகின்றதோ அந்த மனமே துன்பத்திற்குக் காரணம் என்கிறார்.*

*நாம் நம்மை 'யார்' என்று அறியச் செய்யும் முயற்சியே சாதனை. நாம் அடையும் குறிக்கோளே 'ஸாத்யம்'. பகவான் எந்த சாதனையும் செய்யவில்லை. அவருக்கு அதற்குத் தேவையே இருக்கவில்லை. அவர் சதா சாத்யத்திலேயே ஒன்றி இருந்தார்.*

*பகவான் கூறியபடி நாம் அனைவருமே உண்மையில் பகவான்தான். இப்போதே நம் நிலை உண்மையில் அதுதான். பகவான் சொல்லும் அடிப்படை உபதேசம் 'நான் பிரம்மம் அல்ல' என்ற தவறான எண்ணத்தை நீக்கிவிடுக! நாம் யார் என்பதை மனம், புத்தி, அஹங்காரம் என்னும் தவறான எண்ணத்தை நீக்குக என்பதே சாதனை. இதை எப்படிச் செய்வது என்ற வழிகேட்டால் பகவான் 'நீ யார்' என்பதை விசாரத்தின் மூலம் கண்டுபிடி. அதுதான் நேர்வழி என்கிறார். மற்ற எல்லா வழிகளும் இதில்தான் கொண்டு சேர்க்க வேண்டும். ஏனெனில் நமது அடிப்படை பிரச்சினை அஞ்ஞானம். அதை ஞானத்தின் மூலமே நீக்க முடியும்.*

*நமது அடிப்படை பிரச்சினை நாம் யார் என்பதைக் குறித்த அஞ்ஞானம் எனில், அதனுடைய தீர்வு 'நாம் யார்' என்பதை அறியும் ஞானமே.*

*பகவான் கூறுவது என்னவெனில், 'நான் யார்' என்னும் பிரச்சினை அஞ்ஞானத்தில் எழுகிறது. இதற்குத் தீர்வு வழிபாடுகளோ, பூஜைகளோ அல்ல. அவை ஆரம்ப கால உதவிக்காக இருக்கலாம். அவ்வளவே. உண்மையான தீர்வு, விசாரத்தின் மூலம் ஞானம் பெறுவதே.*

நமக்கு பௌதிக சாஸ்திரத்தைக் குறித்த அறிவு வேண்டுமெனில், பௌதிக நூல் ஒன்றை வைத்து வழிபடுவதின் மூலம் அந்த அறிவை அடைய முடியாது. அதைப் பயின்று ஞானம் பெறுவதே வழி.

இந்த ஞானத்தை எப்படி அடைவது? வேதாந்தம் கூறும் வழி மூன்று படிகளைக் கொண்டது: ஸ்ரவணம், மனனம், நிதித்யாஸனம். 'ஸ்ரவணம்' எனில் வேதாந்த நூல்களை ஆழ்ந்து பயில்தல்; 'நான் யார்' என்னும் ஆராய்ச்சியை நூல்களைப் பயில்வதன் மூலம், ஆசார்யன் உபதேசங்கள் கேட்பதன் மூலம் பயில்தல். "நான் இந்தப் பெயர் தாங்கிய சரீரமா அல்லது உதிரமும், எலும்பும், சதையும் ஆக்கிய கூடா, அல்லது உணர்ச்சிகளும், ஞாபகமும் நிரம்பிய மனமா அல்லது அனைத்தையும் தாண்டிய ஒன்றா?" நான் யார் என்ற ஆய்வினை ஸ்ரவணம் மூலம் செய்வது முதல்படி.

உண்மையில் நான் யார் என்பது ஒரு கேள்வி அல்ல. அது ஓர் ஆய்வு. அதற்கு விடை இல்லை. ஜென் தத்துவத்தில் இதை 'கோவன்' என்று சுருக்கமான கேள்வியாகக் கூறுவார்கள். ஜென் ஆசிரியரிடம் சீடன் செல்லும்போது, குரு அவனிடம் 'கோவன்' என்னும் விடை கேளமுடியாத ஒரு வினாவைத் தருகிறார். உதாரணமாக "ஒரு கை தட்டும்போது எழும் ஓசை எது?" என்பது போன்று. இருகை தட்டும்போது மட்டுமே ஓசை எழும். ஒரு கை ஓசை என்பது எங்ஙனம் சாத்தியம்? சீடன் தனிமையில் உட்கார்ந்து பல நாட்கள் அதைச் சிந்தித்தபின், விடை கண்டுபிடித்து விட்டேன் என்று மகிழ்ச்சியுடன் குருவிடம் கேட்கிறான். அது என்னவென்றுகூட கேட்காமல் குரு தன் கையில் உள்ள மூங்கில் தடியால் அவன் தலையில் ஒரு போடுபோட்டு, போய் மீண்டும் ஆய்ந்து வா என்று அனுப்புகிறார். சீடன் மீண்டும் சென்று, பல நாட்கள் கழிந்து, குருவிடம் விரைந்து வந்தான். அவன் 'நான் விடை கண்டுபிடித்து

விட்டேன்' என்று கூறுவதற்கு முன்பே, குரு அவன் தலையில் ஓங்கில் தடியால் அடித்து மீண்டும் தியானித்து வா என்று அனுப்பி விட்டார். பல நாட்கள் கழிந்தன. இறுதியில் சீடன் திரும்பி வந்தான். அவன் முகத்தில் அமைதி தவழ்ந்தது. அவன் விடை ஏதும் கூறாமல் சாந்தமாக நின்றான். ஜென் குரு ஆம்! இப்போது உனக்குத் தெரிந்து விட்டதல்லவா! என்றார்.

'நான் யார்?' என்ற தேடுதலும் இது போன்றதுதான். இதற்கு விடை என்று எதுவும் இல்லை. கேள்வியே பதிலாக அமைகிறது. நான் நானாகவே இருப்பதே அது. ஸத்குரு உபதேசம் ஸ்ரவணத்தின் உச்சகட்டம். 'தத்வமஸி' நீயே அது ஆவாய் என்னும் உபதேசம். இந்த உபதேசத்தின் உச்சகட்டமும் பகவானின் மொழியான சுத்த மௌனம்.

ஸ்ரவணத்துக்கு அடுத்தபடி மனனம் என்பதாம். நமது குறிக்கோளைக் குறித்து அறிவுபூர்வமாக ஸ்ரவணம் மூலம் அறிந்தபின் அதைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்து ஆராய்வதே.

இதில் அடுத்த நிலை நிதித்யாஸனம் என்பதாகும். பக்தி, கர்மயோகம், அனைத்துமே இதில்தான் பூர்த்தி அடைகிறது.

மற்ற எல்லா வழிகளும் இதைச் செய்! அதைச் செய்! என்று கூறும்போது பகவானின் அத்வைத நெறி எதையும் செய்யாதே! நீ நீயாகவே இரு! சுத்த மௌனமே உனது இறுதிநிலை என்று கூறுகிறது. அத்வைதம் என்பது ஒரு *faith* சமய நம்பிக்கை அல்ல: அது நம்முள்ளே நாமே நம்மை அறியும் ஓர் ஆன்மிக முகிழ்ப்பு.

நாம் நம்மை நாமே ப்ரம்மம் என்று உணரத் தடையாயிருப்பது நமது அஞ்ஞானமே. இதனை ஸ்ரவணம், மனனம், நிதித்யாஸனம் மூலம்

நீக்க முடியும். எனவே ஸ்ரவணம், மனனம், நிதித்யாஸனத்தை இடைவிடாது பயில வேண்டும் என்று கண்டோம். ஏன் இதை இடைவிடாது பயில இயலவில்லை? எது இதற்குத் தடையாய் உள்ளது? ஒரே ஒரு தடை விக்ஷேபம் மனதின் இடைவிடாத அலைவுகள் என்று அத்வைத தத்துவம் கூறுகிறது. அந்த இடைவிடா அலைதலினால்தான் நாம் அஞ்ஞானத்தை நீக்கும் பயிற்சிகளைத் தொடர முடிவதில்லை.

இதற்கு மருந்து எது? மனதை ஒருமைப்படுத்தல். மனதை ஒருமைப்படுத்தும் வழி எது? உபாஸனை அல்லது தியானம்.

தியானத்தின் மூலமே ஆத்மாவை அறிய முடியுமா? இயலாது. அது ஞானத்தின் மூலமே முடியும்.

'விக்ஷேபம்' - என்னும் மன அலைதல் ஸ்ரவண, மனன, நிதித்யாஸனம் மூலம் நாம் பெற்ற தத்துவ அறிவை நாம் உள்வாங்காமல் தடைசெய்கிறது.

அப்போது தியானத்தின் மூலம் மனம் ஒருமைப்பாடு அடைகிறது என்பது உண்மை. ஆயினும் தியானம் செய்வதற்கு எது தடையாய் அமைகிறது?

பகவத் கீதா ஆறாவது அத்யாயத்தில் அர்ஜுன் கண்ணனிடம் கூறுகிறான். கண்ணா! நீ மனதினை தியானத்தினால் ஒருமைப்படுத்தக் கூறுகிறாய். அது காற்றினைக் கையால் பிடிப்பது போன்ற கடுமையான முயற்சி என்று கூறுகிறான்.

இந்த மன ஒருமைப்பாட்டுக்குத் தடையாய் அமைவது எது? 'சித்தமலம்' என்று கூறப்படும் தடை. இதனை நீக்கும் உபாயம் 'சித்த சுத்தி'. சித்த சுத்தி அடையும் வழி: கர்மயோகம் தன்முனைப்பின்றி இறைவனுக்கு அர்ப்பணமாக நம் கர்மங்களைச் செய்தல். இதுவே நமது சித்தத்தை சுத்தமாக்கும் வழிகளுள் சிறந்த ஒன்று.

*கருத்தனுக்கு ஆக்கும் நிட்காமிய கர்மம்*
*கருத்தைத் திருத்தியது உந்தீபற*
*கதிவழி காண்பிக்கும் உந்தீபற*

என பகவான் சித்த சுத்திக்கு வழிகாட்டுகிறார்.

இறைவனுக்கே பலன்களை அர்ப்பணிக்கும் நிஷ்காம்ய கர்மமாக நம் செயல்களைச் செய்தால் அந்தக் கர்மயோகம், நமது சித்தத்தை சுத்தம் அடையச் செய்து உபா ஸனைக்கான வழியைக் காண்பிக்கும் என்கிறார் பகவான்.

சித்தமலம் என்பது பல்வேறு பிறவிகளில் நமது அஹங்காரத்தால் உந்தப்பட்ட நம் செயல்களின் பலனான குப்பைகள். அவற்றைக் கர்ம யோகத்தின் மூலம் அகற்ற வேண்டும்.

ஆத்ம சாதனையின் படிகளைக் காணும்போது இவ்வாறான அமைப்பைக் காண்கிறோம்.

மூன்று பிரச்சினைகள் - மூன்று தீர்வுகள் - அதற்கான மூன்று வழிகள்:

| | பிரச்சினை | தீர்வு | வழி |
|---|---|---|---|
| 1. | சித்தமலம் | சித்த சுத்தி | கர்மயோகம் |
| 2. | விக்ஷேபம் | ஏகாக்ரம் | உபாஸனை |
| 3. | அஞ்ஞானம் | ஞானம் | ஸ்ரவணம்,<br>மனனம்,<br>நிதித்யாஸனம் |

இறுதியில் ஆத்ம சாட்சாத்காரம்

மாண்டூக்ய உபநிஷதம் அறுதியிட்டுக் கூறுகிறது 'ஏகாத்ம ப்ரத்யய ஸாரம்' இடைவிடாமல் 'நான்' என்னும் அதிர்வைப் பின்பற்றுக என்பதே இதன் பொருள்.

'நான் உண்கிறேன், ஓடுகிறேன்' என்று கூறும்போது 'நான்' என்பது பரம் அல்ல, மனதின் செயல்பாடு. அதுவே சிதாபாஸன் - பிரதிபலிக்கப்பட்ட ஆத்மா. அது யார் என்று விசாரித்தால் ஆத்மஞானம் பெறலாம் என்கிறார் பகவான்.

ஆத்மானம் ஸததம் ஞானம்

எப்போதும் ஆத்மாவிலேயே மனதினை நிலைநிறுத்துவாய் என்கிறது அபரோக்ஷானுபூதி. அஞ்ஞானத்தை நீக்குவதே சாதனை. அதன்பின் ஆத்மா தானாகவே பிரகாசிக்கும்.

நாம் ஆரம்பத்தில் கண்டபடி 'தேகம் நான்' என்பது நாம் கண்ட தவறான விடை. மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் அனைத்துக்கும் அடிப்படையான இதுவே அஞ்ஞானமும் ஆகும். இந்த அஞ்ஞான இருளின் விதை 'வாசனை' ஆகும். பல பிறவிகள் நமது எண்ணங்கள் அல்லது இச்சைகளின் பதிவே வாசனை.

'Who am I?' அல்லது 'What am I?' நான் யார் அல்லது நான் எது என்ற விசாரத்தில் இறங்க வசதியாக, மனதினை தூலதேகம், சூட்சும தேகம், காரண தேகம் என்று தத்வ ஆராய்ச்சியாளர் விளிக்கின்றனர். நமது ஐம்புலன்கள் வாயிலாக மனதால் அறியப்படி தூல வடிவான உடல் (Gross Body). இவை அனைத்தையும் தூல சரீரம் எனலாம். ஏனெனில் இவை அனைத்துமே அடுத்த நிலையில் உள்ள மனமாகிய சூட்சும சரீரத்தால் அறியப்படுபவை. நாம் தூங்கும்போது தூல உடம்பை உணர்வதில்லை. தூக்கத்தில் உடல் இல்லை, உலகம் இல்லை. ஆனால் 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வு உண்டு என்கிறார் பகவான். உலகமும், உடலும் ஆகிய தோற்றம் மனம் எழும்போது தானும் எழுந்து மனம் இருக்கும்வரை அதுவும் இருந்து மனம் ஒடுங்கும்போது தானும் மறைகிறது.

*உலகு ஐம்புலன்கள் உருவே; வேறுஅன்று; அவ்வுலகம்*
*புலன் ஐம்பொறிகட்குப் புலனாம் உலகைமனம்*
*ஒன்று ஐம்பொறிவாயாலே ஓர்ந்திடுதல் ஆதலால் மனத்தை*
*அன்றி உலகுஉண்டோ? அறை*

*(உள்ளது நாற்பது, 6)*

பொருள்: நாம் கண்ணால் காணும் இவ்வுலகம் ஐம்புலன்களின் வாயிலாக வெளிப்படும் உருவம் ஆகும். அவற்றிலிருந்து வேறுபட்டது அல்ல. சுவை, ஓசை, தொடுஉணர்ச்சி, ஒளி, நாற்றம் ஆகிய ஐந்து உணர்வுகளும், ஐந்து பொறிகளான கண், மூக்கு, வாய், செவி, உடல் ஆகியவற்றால் அறியப்படுபவை. இந்த ஐம்புலன்களும் மனம் விழித்திருப்பதால் அறியப்படுகின்றன. மனம் இன்றேல் இவை இல்லை. மனதிற்கு அன்னியமாக உலகம் என்ற ஒன்று இல்லை.

*உடல் ஒழிந்து இல்லை உலகம் உடலும்*
*உளம் ஒழிந்து ஓர்காலும் இல்லை*

*(குருவாசகக் கோவை, 99)*

ஒன்று உண்மையில் இருப்பது என்றால் அது சுயமாகவே விளங்க வேண்டும். அதன் இருப்பு வேறு எதையும் சார்ந்து இருக்காது. தூக்கத்தில் உலகம் இல்லை. ஆனால் ‘நான் இருக்கிறேன்’ என்ற உணர்வு உள்ளது அல்லவா! எனவே, நமது உண்மையான இருப்பும், உலகின் பொய்ம்மையும் ஒப்புக் கொள்ளவேண்டிய ஒன்று. பகவான் உள்ளது நாற்பது அநுபந்தத்தில் (10) கூறுகிறார். தேகமானது மண்குடம் போன்ற ஜடம். இதற்கு ‘நான்’ என்ற அறிவு இல்லாததாலும், அந்த சரீரத்தை உணராத தூக்கத்திலும் தினமும் நம் இருப்பை உணர்வதாலும் இந்தத் தேகம் நானல்ல; இருப்புணர்வே நம்முள்ளே ‘நான்’ ‘நான்’ என்று சதா அதிர்கின்ற அதுவே ‘நான்’ என்பதே இந்த நான் யார் விசாரத்தின் முடிவு. ‘பிரதிபோ$^{3}$த$^{4}$ விதி$^{3}$தம் அமிர்தத்வம் விந்த$^{3}$தே’ எனக் கேனோபநிஷதம் கூறுகிறது.

*அனைத்தும் ஆன்மப் பயிற்சியே. 'நான்' என்ற உணர்வுடன் செய்யும் பயிற்சிகள். அதில் பூர்ணம் அடையும்போது, அதுவே உள்ளுணர்வாக ஆகிறது. 'நான்' தானாக, ஒடுங்கும்போது, அது ஸஹஜ நிலை அடைகிறது. அந்தக் கணத்தில் அனைத்தும் முற்றிலும் மறைந்து விடுகிறது.*


*இதை உணர்வாக்க 'தாவோ' குருமார்கள் பலவித பரிமாணங்களைப் பயன்படுத்தினர். கவிதை, ஓவியம் தீட்டுதல் போன்ற பல்வேறு பயிற்சிகளிலும் ஈடுபட்டனர். தாவோ குழு ஓவியம் தீட்டுதலைக் கைக்கொண்டால் பல வருடம் பயிற்சி செய்து அதில் வல்லவனாக வேண்டும். பிறகு சில வருடம் கழிந்த பின்னர் ஓவியம் தீட்டுதலை முற்றிலுமாக விட்டுவிட வேண்டும். தூரிகைகளையும், வண்ணங்களையும் தூக்கி எறிந்து விடவேண்டும். மனதில் ஓவியம் வரையவேண்டும் என்ற எண்ணத்தையே விட்டுவிட வேண்டும். ஓவியம் வரையவேண்டும் என்ற எண்ணமே அந்த சீடன் மனதிலிருந்து முற்றிலும் நீங்கியபின் குருநாதர் கூறுகிறார்: இப்போது ஓவியம் வரைவதை மீண்டும் ஆரம்பிப்பாயாக! இப்போது அந்தச் சீடன் ஓவியத்தின் நுணுக்கத்தை அறிந்து இருந்தாலும் அவன் ஓவியம் தீட்டவேண்டும் என்ற தேவை இல்லை. அவன் இப்போது ஓவியம் தீட்டுவது முயற்சி மூலம் இல்லை. அவனுக்கு அது சஹஜம் ஆகிறது. அதற்குப்பின் சீடனிடமிருந்து குருநாதர் பிறக்கிறார். பகவான் 54 ஆண்டுகள் அண்ணாமலையில் இருந்த நிலையே ஸஹஜ சமாதி நிலை. எல்லாச் செயல்களையும் செய்து கொண்டிருந்தாலும் 'கர்த்ருத்வ பாவம்' இன்றி, 'நான் செய்கிறேன்' என்ற தன்முனைப்பு இன்றி, ஸஹஜ பாவத்திலேயே அவர் செயலாற்றினார்.*

*இதைக் குறித்த ஒரு தாவோ கதை உள்ளது. திபெத்தில் ஒரு பெரிய புத்தர் ஆலயம் கட்டப்பட*

ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்தக் கோயிலின் முகப்பு வாயில் மிகச் சிறப்பாக அமைய வேண்டும் என்று தீர்மானித்து அந்த முகப்புக்கான வடிவமைப்பை தீட்டிக் தரவேண்டும் என்று ஓவியக்கலை அறிந்த குருமார்களை அழைத்தனர். அங்கே வருகை தந்த மூத்த குருநாதரையும் வேண்டினர். அந்த மூத்த குருநாதர் எப்போது சித்திரம் திட்டினாலும் அந்தச் சித்திரம் முடிந்த பின்னர் தமது சீடனிடம் காட்டி அது சரியாக இருக்கிறதா என்று கேட்பார். அந்தச் சீடன் அது சரியாக அமையவில்லை என்று கூறிவிட்டால் அதைத் தூர எறிந்து மீண்டும் முதலில் இருந்து துவக்குவார். சீடர் அது சரியாக உள்ளது என்று கூறும்வரை அதைத் திரும்பத் திரும்ப செய்து வருவது வழக்கம்.

முகப்பு வாயிலுக்கான வரைவை ஒரு பெரிய பிரச்சினை ஆனது. அவர் வரைந்த படங்களையெல்லாம் சீடன் சரியில்லை என்று கூறிவிட்டான். குருநாதர் திரும்பத் திரும்ப படங்களை வரைந்து வரைந்து பல வாரங்கள் கழிந்தன. ஒன்றை முடித்த பின்னர் அருகிலிருந்த சீடன் அதைப் பார்த்து சரி இல்லை என்று தலையாட்டி விடுவான். சில மாதங்களில் வரையும் மை தீரும்போல இருந்தது. சீடன் மை கொண்டுவர வெளியே சென்றான். திரும்பி வரும்போது பார்த்தால், குருநாதர் வரைபடத்தை முடித்து ஆனந்தத்தில் ஆடிக்கொண்டு இருந்தார். மிகச் சிறப்பாக அமைந்திருந்த அந்த வடிவமைப்பைப் பார்த்துவிட்டு சீடன் கேட்டான். இது மிக அழகாக அமைந்துள்ளது. ஏன் இதுநாள் வரை இவ்வளவு சிறப்பாக அமையவில்லை? என்று கேட்டான்.

குருநாதர் விடையிறுத்தார்: நீ என் அருகாமையிலேயே இருந்து வரைவைப் பார்த்துக்கொண்டு இருந்தாய். உன்னுடைய அருகாமையில் நான் ஓர் ஓவிய வல்லுனராக மட்டும் இருந்தேன். நீ என்ன கூறப்



போகிறாய் என்ற எதிர்பார்ப்பில் என் உணர்வு இருந்தது. ஒவ்வொரு முறையும் நீ இப்படம் சரியாக அமைந்து உள்ளது என்று கூறி விடுவாய் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தேன். நான் நானாக சகஜ நிலையில் இல்லை. நீ வெளியே சென்றவுடன் நான் உன்னை மறந்து விட்டேன், அத்துடன் என்னையும் மறந்து விட்டேன். இன்னொருவர் இருந்தால் நீங்கள் தன்முனைப்புடன்தான் இருப்பீர்கள். இரண்டாவது நபர் மறைந்தவுடன், தன்முனைப்பும் மறைந்து விடுகிறது. 'நான்' இல்லாத சஹஜ நிலையில் 'நான்' இல்லாதபோது ஓவியம் தானாகவே நிகழ்ந்தது. நீ முன்பு சரி இல்லை என்று புறக்கணித்த அத்தனை வடிவுகளும் 'என்னுடைய' வேலை. இந்த இறுதி வடிவம் இயற்கை மூலம் நிகழ்ந்தது. பிரபஞ்சத்தின் இந்த சிருஷ்டிக்கு நான் ஒரு கருவியாக மட்டுமே இருந்தேன். எல்லா விஷயங்களில் இருந்து நாம் விலகியவுடன் நமக்குள் ஒரு சக்தி வெள்ளம் பெருக்கெடுக்கிறது. நாம் இயல்பாக இருக்கும்போது இந்தச் சக்தி நம்மை உச்சிக்கு அழைத்துச் செல்கிறது.

உரையாடலை மீண்டும் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்.

## 9. பகவானை நோக்கிய பாதை

ஒருவனது உள்மனத்துடன் தொடர்பு கொள்ளும் பழைய ஞாபகங்களை மீண்டும் மீண்டும் நினைவில் கொள்வது என்பது ஒரு தவறான வழி. எனினும் நான் எனது இந்த நாட்குறிப்பை எழுதும்போது நான் பகவானைச் சந்திக்கும் வரை, நான் அதுவரை பெற்றிருந்த தாந்திரிக் அனுபவங்கள் அனைத்தும் தோல்வியின் சின்னங்களே என்ற முடிவிற்கு எங்ஙனம் வந்தேன்? என்ற கேள்வி எழுந்து கொண்டுதான் இருந்தது.

நான் 25 வயதாக இருக்கும்போது தியாசபிகல் சொசைட்டியின் வழிமுறைகள் என் கவனத்தை ஈர்த்துக் கொண்டு இருந்தன. அச்சங்கத்தின் தர்க்கபூர்வமான தத்துவங்களும் திருமதி. அன்னிபெஸன்ட், திரு. லெட்பீடர் போன்றோரின் எழிலான பேச்சு நடையும் என் கவனத்தைக் கவர்ந்தன. சிலகாலம் அவர்களுடன் நான் கடிதத் தொடர்பும் கொண்டிருந்தேன் அச்சங்கத்தின் முதல் தலைவரான கர்னல் ஆல்காட்டின் லட்சிய நோக்கும் திருமதி ஃப்ளாவட்ஸ்கியின் சக்தி நிரம்பிய ஆளுமையும் இதில் முக்கிய பங்கு வகித்தன. இச்சங்கத்தின் ஆதார தத்துவங்கள் மட்டும் அன்றி எங்ஙனம் மனித சக்தியின் எல்லையைத் தாண்டிய வல்லமைகளை நாம் பெற முடியும் என்பது குறித்தும் இங்குக் கூறப்பட்டது. எர்னஸ்ட் வுட் எழுதிய நூலில் கூறியிருந்தபடி நான் தியானப் பயிற்சியை மேற்கொள்ள ஆரம்பித்தேன். இங்ஙனம் சில ஆண்டுகள் இத்தகு பயனற்ற பயிற்சிகளில் நான் காலம் கழித்தபின், என் ஆர்வம் குறைய ஆரம்பித்தது. இதனால் நான் முன்னேற்றம் எதுவும் காணவில்லை. இந்த நூல்களில்

*கூறப்பட்ட வழிமுறைகள் அன்றி, தனது சொந்த அனுபவத்தில் ஞானம் பெற்ற ஒருவரையும் நான் இச்சமயத்தில் சந்திக்கவில்லை. அவர்கள் தங்களது குருமார்கள் என்று கூறிக்கொள்பவர்களை நான் காண இயலவில்லை; அவர்கள் பெரும்பாலும் மனக்கற்பனையே என்று எண்ணத் தொடங்கினேன்.*

*இந்த தெய்வீக குருமார்களை, அவர்தம் பௌதிக வடிவில் பிளாவட்ஸ்கி மற்றும் லெட்பீட்டர் மட்டுமே சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர் என்று தோன்றியது. வேறு எவரும் அந்த வரம்பு கடந்த குருமார்களை சந்தித்ததாக தெரியவில்லை. நான் 1926இல் எழுதிய கடிதத்திற்கு திருமதி பெஸன்ட் இவ்வாறு விடையளித்தார். கர்னல் ஆல்காட் 1907இல் மரணமுற்றபின் இந்த குருமார்கள் தியாசாபிகல் சங்கத்தினை நேரடியாக வழிநடத்துதலிலிருந்து விலகி விட்டனர். ஆயினும் 1925-இல் இருந்து மீண்டும் வழிநடத்தத் துவங்கியதை துவங்கினர் என்று குறிப்பிட்டார்.*

*ஆரம்பத்தில் நமது மனித சக்தியைத் தாண்டிய உயர் சக்திகளை அடைய முற்படுவது எனக்கு சுவாரஸ்யமாக இருந்தது. அது எனது ஆர்வத்தை தூண்டியது. பின்னால் இவை அனைத்துமே மாறிக்கொண்டே இருக்கும் நமது மனித சுவாசத்தைச் சார்ந்தவை. எனவே அவை மனத்தளவு மட்டுமே உள்ளன. ஆத்மசாட்சாத்காரத்தை அடைய இவைகள் தடைக்கற்களே என உணர்ந்தேன்.*

*அதன்பின் நான் ஹெர்மெடியிஸம் (Hermeticism) என்னும் எகிப்திய சாதனை முறையைப் பயின்று 'தரோட்' (Tarot) எனப்படும் குறியீட்டு முறையைப் பின்பற்றத் துவங்கினேன். நான் கணிதம் பயின்று இருந்ததால் எண்களுக்கும் 'தரோட்' கார்டுகளுக்கும் இடையே உள்ள தொடர்பு எனக்குப் புலப்படத் துவங்கியது. இதன் தோற்றுவாய்களான எலிபாஸ் லெவி*

மற்றும் டாக்டர் பாபஸ் எனது தற்காலிக குருநாதர்கள் ஆயினர். இந்தத் 'தரோட்' கார்ட் கற்றைகளைக் கையாளுவதன் மூலம் எண்ணற்ற எண்ணங்களை உருவாக்கும் பயனற்ற செயல்பாடுகளில் ஈடுபடத் துவங்கினேன். இவற்றில் ஈடுபட்டிருக்கும் பல்வேறு ரகசியக் கூட்டங்களில் நான் ஈடுபடத் துவங்கினேன். நான் அமர்ந்திருந்த நாற்காலியின் பின்னுள்ள பெரிய கரும்பலகையில் எனது கணிப்புகளையும் கருத்துக்களையும் நான் எழுதுவதை ஆர்வத்துடன் காணும் மக்களின் முகங்களைக் கண்டு நான் பெருமிதம் அடைய துவங்கினேன்.

எனது அடுத்த பிரசங்கத்தில் 'கப்பாலா' எனப்படும் புராதனமான யூதமுறை யோகத்தினைப் பற்றிக் கூறத் துவங்கினேன். நான் பேசி முடித்தபின், அந்தக் கரும்பலகை முழுவதும் ஹீப்ரு மொழி எழுத்துக்களாலும் தாந்திரிக முக்கோணங்களாலும் நிரப்பப்பட்டு இருந்தது. எனது பேச்சு முடிந்தபின் அரங்கமே கைத்தட்டலில் அதிர்ந்தது.

அந்தக் கூட்டத்தில் எனது பழைய நண்பரான ஒரு ராணுவ அதிகாரியை பார்த்தேன். மிகுந்தகருணை உள்ளம் கொண்ட அவர் ஓர் பர தத்துவ அமைப்பின் தலைவராக இருந்தார். அவர் என்னிடம் உங்களது பிரசங்கங்கள் மிகச் சிறப்பாக உள்ளன. அரங்கு நிரம்பி வழிகிறது. நீங்கள் பேசுவதின் சாராம்சம் இந்த அரங்கில் 10 சதவிகித மக்களுக்குக் கூடப் புரியாமல் இருக்கலாம். அது எந்த விதத்திலும் உங்களை, பிரசங்கத்தின் வெற்றியைப் பாதிக்கப் போவதில்லை என்று கூறினார். இந்தப் புகழ் வார்த்தைகள் என்னை மிகவும் பாதித்தது. அதிலிருந்து நான் சொற்பொழிவு செய்வதை நிறுத்தி விட்டேன். சொற்பொழிவுக்கு வருபவர்களில் 99% பேர் ஏதோ ஒரு விசித்திரமான விஷயத்தைக் கேட்டுத்

தம் வாழ்வில் சிறிது சுவையூட்டிக் கொள்வதற்குத்தான் வருகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன்.

ஹெர்மெடிக் மறைபொருள் அறியும் சாதனையில் நான் கொண்டிருந்த ஆர்வம் எலிஃபாஸ் லெவி மற்றும் டாக்டர் பாபஸ் நிர்ணயித்த ஒரு மந்திர வித்தையை நான் முயற்சித்த பின் முடிவுக்கு வந்தது. நாங்கள் மூவர் ஒன்றுகூடி, தொலைதூரத்தில் உள்ள ஒரு நாசமடைந்த அரண்மனையின் கோபுரத்தில் இருபத்தொரு நாட்கள் சாதனை செய்தோம். மிகச் சிரமத்துடன் கால விரையத்துடன் நாங்கள் செய்த முயற்சிக்குப் பலன் என்னமோ பூஜ்ஜியம் தான். எங்களுக்குக் கிடைத்ததெல்லாம் ஊதுபத்தி புகையிலும் உலர்ந்த தாவரங்களை எரிப்பதன் மூலம் கிடைத்த உருவெளித் தோற்றங்களே; சில ஒலிகளும் கேட்டிருக்கலாம். நான் மிகவும் ஏமாற்றம் அடைந்தேன். நாங்கள் ஆர்வத்துடன் ஈடுபட்ட இந்தத் தாந்திரியச் சோதனைகளால் எதையுமே நிரூபிக்க முடியவில்லை.

எங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைத்த தோற்றங்களும் வேறாகவே இருந்தன. சிறிது காலத்திலேயே நான் இந்த மந்திர தந்திரங்களில் இருந்த ஈடுபாட்டை விட்டொழித்தேன்.

அடுத்தபடியாக நான் டாக்டர் ப்ராண்ட்லர் ப்ராக்ட் என்ற ஜெர்மானிய மறைபொருள் வித்தகரின் நூலைப் பயில ஆரம்பித்தேன். இந்த நூலில் அவர் எண்ணங்களைக் கட்டுப்படுத்தும் பல்வேறு பயிற்சிகளையும் நமது தனித்தன்மையையே கட்டுப்படுத்தும் பயிற்சிகளையும் விவரிக்கிறார். இதன் நோக்கம் சக்தியையும், திறமையையும் மேம்படுத்துவதே. இது மனத்தை ஒரே ஒரு குறிக்கோள் மேல் ஒருமுகப்படுத்தி வேறு எதையும் எண்ணாது இருப்பதாகும். மற்றும் எண்ண ஓட்டம் முழுவதையும்

ஒரு பத்து நிமிடத்திற்கு முற்றிலுமாக நிறுத்தி வைப்பதாகும்.

அவர் எடுத்துரைத்த மற்றும் சில பயிற்சி முறைகளை இங்கே விவரிக்க முடியாது. ஒரு இளம் யோகி அடையும் நிலையை ஆறு மாத பயிற்சியில் அடைய வேண்டுமென அவர் எதிர்பார்த்தார். அந்தச் சூழ்நிலையில் தியானம் எனக்கு மூன்று மாதங்களிலேயே கிட்டியது.

நான் இதுவரை பயின்று வந்த ஹெர்மடிஸியம், மந்திரக்கலை மற்றும் டாக்டர் ப்ராக்ட் இப்போது காட்டிய வழிமுறைகள் அனைத்துமே மறைந்தது. நான் பாரீஸ் நகருக்கு ஆன்மிக சகோதரத்துவ ஒருங்கமைப்பின் தலைமையகத்துக்குச் சென்றேன். பால் செடிர் என்னும் பரதத்துவ ஞானி இதனை 20 ஆண்டுகளுக்கு முன்னர் பாரிசில் தொடங்கினார். அவரது நூலான ‘தீக்ஷை’ (The Initiation) என்ற நூல் என் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் தனது ஆசானைப் பற்றியும் ‘ஆசானுக்கு எல்லாம் ஆசான்’’ எனப்படும் தலைமை ஆசானுடன் தான் பெற்ற அனுபவங்கள் குறித்தும் விவரமாக எழுதியுள்ளார். (இந்தத் தலைமை ஆசானது பெயரை அவர் எங்கேயுமே குறிப்பிடத் துணியவில்லை.) இந்த ரகசிய அமைப்பு, இதுவரை நான் அறிந்தவரை மிக உயர்ந்த, தூய்மையான கருத்துக்களைப் பரப்பி வந்தது. ஆயினும் இந்த 1935-ஆம் ஆண்டில் பால் ஸெடிர் தேகவியோகம் அடைந்து 15 ஆண்டுகள் கழிந்துவிட்டன.

எனவே அவர் குறிப்பிட்ட ‘ஆசானுக்கெல்லாம் ஆசான்’ யார் என்பதை நான் தேடத்துவங்கினேன். ஆனாலும் என்னால் அவர் யார் என்பதை அறிய முடியவில்லை. சில காலம் கழித்து ஸெடிரை நன்றாக அறிந்த சில மூத்த அங்கத்தினரை தொடர்பு கொண்டு, எனக்கு வழிகாட்ட முடியுமா? எனத்

*தேடத் தொடங்கினேன். ஆயினும் இது மிகக் கடினமான, பிரயத்தனமாக இருந்தது. ஏனெனில் கீழை நாட்டு ஞானிகள் போலன்றி மேலைநாட்டு ஆன்மிக அறிஞர்கள் தங்களுடைய மிக நெருங்கிய சீடர்களை அன்றிப் பிறர்க்குத் தம்மை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. அவர்தம் நிபந்தனைகள் மிகக் கடினமானவை. இந்தப் பெரும் ஞானியர் குழாமில் இணைவது என்பது மிகக் கடினமான ஒன்று. இவ்வாறு இணைய அனுமதிக்கப்பட்ட பின்னர், எந்த ஒரு ரகசிய சாதனை குறித்தும் வாழ்நாள் முழுவதும் வெளியிடக்கூடாது என்ற சத்தியமும் சீடரிடமிருந்து பெறப்படுகிறது. எனவே இது குறித்து என்னால் மேலே எதுவும் கூற இயலாது. ஆயினும் ஓர் ஆரம்ப கால அனுபவத்தை என்னால் கூற இயலும்.*

*நான் இருந்த ஊரில், அம்மக்களால் ஞானி என்று கருதப்பட்ட ஒரு சிறிய தவ போதகர் இருந்தார். அவர் ஓர் உண்மையான துறவி. எந்தச் சமயப் பிரிவைச் சார்ந்தவரும் அவரது ஆசிகளைப் பெறுவதற்காக அங்கே திரளுவார்கள்.*

*எனது பத்தொன்பதாவது வயதில், முதல் உலகப்போர் மூண்டதின் காரணமாக எனது கலாசாலை படிப்பை விட்டுவிட்டு, இராணுவ சேவையில் சேரவேண்டியதாயிற்று. எனது அன்னை பிரம்மஞான சங்கத்தினை (தியாசபிகல் சொசைட்டி) சேர்ந்த நுண்ணிய ஆன்மிக உணர்வு உடையவர். எனினும் அந்த இளம் வயதில் இயற்கையாகவே விளையாட்டிலும் படிப்பிலும் மட்டுமே எனது ஆர்வம் இருந்தது. ஒரு நாள் எனது அன்னை என்னிடம் கூறினார், மகனே நீ இராணுவத்தில் சேரப் போகிறாய். உன்னை மீண்டும் காணும் பாக்கியத்தை இறைவன் எனக்கு அளிப்பானா என்று தெரியாது. நாளை உன்னை நமது கிறிஸ்தவத் துறவியிடம் அழைத்துச் செல்லப் போகிறேன். அவரது*

ஆசி உனக்குக் கிட்டுமாக! என்று கூறினார். எனக்கு அதில் விருப்பம் இல்லாவிடினும் எனது அன்னையின் வார்த்தைகளைத் தட்டமுடியவில்லை. மறுநாள் அந்த கிறிஸ்தவ போதகர் குடிலில் ஒருசில நாற்காலிகளும், சுவரில் மாட்டப்பட்ட சிலுவை மட்டுமே இருந்த ஒரு அறைக்கு அவர் என்னை அழைத்துச் சென்றார். ஒரு மதபோதகரின் உடை அணிந்திருந்த அவருக்கு 40 வயது இருக்கும். கைகள் மார்பில் இணைந்து இருந்தன. அவரது தலை முன்னோக்கி சாய்ந்து இருந்தது. அவரது உடல் மெழுகு போன்ற ஒரு வினோத நிறம் பெற்று இருந்தது. அவரது மெலிதான முகத்தின் இருபுறமும் நீண்ட கேசம் அடர்ந்து இருந்தது. அவரது கண்கள் ஆழ்ந்த கரு நிறத்தில், ஒரு மிருதுவான ஒளியுடன் திகழ்ந்ததைக் கண்டேன்.

இதுவரை நான் கண்ட எந்த ஒரு மனிதனின் கண்களும் அங்ஙனம் இருந்ததில்லை. அவரது கண்கள் ஒரு அதிசய சாந்தம், சக்தி மற்றும் ஞானம் பொதிந்து ஒளிர்ந்தன. நல்லவேளையாக நான் அவருக்கு எந்த சம்பிரதாய ரீதியான வந்தனங்களையும் சொல்லவில்லை. எனது நாக்கு கட்டிப் போட்டது போல் இருந்தது. அத்துறவி மௌனமாக முறுவலித்து பின், நீ இங்கு வந்தது நல்லது, மகனே! என்று கூறி பின் என் தலை மீது தன் கைகளை உயர்த்தி சிலுவைக் குறியிட்டார். அவரது மெலிந்த கரங்களில் நான் தன்னிச்சையாய் முத்தமிட்டேன். அவ்வளவுதான், அறையில் இருந்து வெளிவரும்போது, அவர் முன் இருந்த என் அன்னையிடம் அவர் கூறுவதைக் கேட்டேன், சாந்தத்துடன் செல். இந்த இளைஞனுக்கு நல்லதே சம்பவிக்கும்!

முதன் முதலில் மகரிஷியின் திருமுன் நான் அமர்ந்தபோது இந்நிகழ்ச்சி எனக்கு நினைவுக்கு வந்தது. மற்றும் எனது கனவில் நான் சந்தித்த அந்தக் கிறிஸ்தவ

*போதகரின் பெயரும் நான் பாரிஸில் சந்திக்க முயன்ற ஆசானுக்கெல்லாம் ஆசானின் பெயரும் ஒன்றே என்பதும் தோன்றியது.*

*நான் பிரான்ஸ் சென்ற நிகழ்வு, குடும்ப வாழ்வு, பின்னர் இரண்டாம் உலகப் போர் அனைத்தும் என்னை ஓர் இருளில் ஆழ்த்தின. எனது முன்னால் ஆன்மிக அனுபவங்களை நான் மறக்கத் துவங்கினேன். பின்னர் 1945-ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் பிரம்மஞான சங்கத்தில் முன் சந்தித்திருந்த ஒரு பெண்மணி பால் ப்ரண்டனின் 'ரகசிய இந்தியாவில் ஒரு தேடல்' என்ற நூலை எனக்குத் தந்திருந்தார். ஆரம்பத்தில் அதைப் படிப்பதில் எனக்கு ஆர்வம் இல்லாமல் இருந்தது. ஆயினும் அப்பெண்மணி அதை நான் படித்துத்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தியதால் படிக்க ஆரம்பித்தேன். அந்நூலின் இறுதிப்பகுதியில் பால் பிரண்டன் மகரிஷியைச் சந்திக்கும் பகுதிகளின் விவரிப்பு என் மனதில் ஆணி அடித்தார்போல் இறங்கியது. எனது உண்மையான சத்குருவினை நான் கண்டுபிடித்து விட்டேன்.*

*இந்த உறுதி எனது முயற்சி ஏதும் இல்லாமல் தானாகவே என்னுள் முகிழ்த்தது. அங்கு ஐயத்திற்கே இடமில்லை. என்னுடைய முன்னால் தேடல்கள் அனைத்தும் ஏன் வியர்த்தம் ஆயின என்று இப்போது எனக்குப் புரிந்தது. நான் முன்பு பின்பற்றிய தியாஸாஃபிகல் சங்கம் காட்டும் மறைபொருள் ஆய்வுகள் அனைத்துமே ஒரு மூடிய வாயிலை நோக்கி அழைத்துச் செல்வனவே. நமது ஆன்மிகத் தேடலில் அவை சிறிது உதவிசெய்யலாம். ஆயினும் நம்முடைய இறுதி லட்சியத்தை அடைய அவை உதவி செய்வதில்லை. அவை கூறும் பயிற்சிகள், தியான முறைகள், பிராணாயாமப் பயிற்சிகள் அனைத்துமே காலத்தையும் சக்தியையும் செலவிட*

*காட்டும் வழிகளே. உண்மையில் அவை எனது இறுதி நோக்கத்தை ஒரு நிழலாய்க் கவிழ்த்து மறைத்தன.*

*மகரிஷி காட்டும் தெள்ளிய வழியில் நமது லட்சியம் நாம் எடுத்து வைக்கும் முதல் அடியிலேயே தெளிவாகப் புலப்படுகிறது. அவ்வழி மனிதனை முழுமையான ஆன்ம சொரூபம் ஆக்கும் ஒன்றாகும். நம் ஆத்மாவின் சக்தி அளவிடற்கரியது. பகவான் கூறும் விசார மார்க்கம் எங்ஙனம் நேரத்தை விழுங்கும் மறைவழிப் பயிற்சிகளைப்போல் அல்லாமல் நேரடியாக நம்மை நோக்கத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது என்பது விளங்கியது. இந்த விசார மார்க்கத்தில் 'நான் யார்' என்னும் ஆய்வில் நான் ஈடுபட்டபோது இதுகாறும் நான் மிக முயன்று தேடிவந்த மன ஒருமைப்பாடு, தியானம், ப்ராணன் மற்றும் தேகக் கட்டுப்பாடு, தெளிந்த பார்வை, மன அமைதி மற்றும் ஆனந்தம் அனைத்துமே தானாகவே தேடாதுற்ற திருவருள் நிதியம் போல் என்னை வந்து அடைந்தன.*

*அது முதல் நான் விசாரத்தில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினேன். (நான் பின்பற்றிய விசாரநெறி பற்றி 14ஆவது அத்தியாயத்தில் கூறியுள்ளேன்.) எந்தப் பயிற்சியிலுமே, முதல் அடி எடுத்து வைப்பது சிரமமாகத்தான் இருக்கும். நான் ஆத்ம விசாரம் செய்யத் தொடங்கிய நேரத்தில் அவ்வளவு சிரமப்பட்டேன் என்பதை இப்போது நினைத்துப் பார்த்தால் நகைப்பு தான் வருகிறது. ஆனால் அப்போது மிகச் சிரமமாக தோன்றியது என்பது உண்மையே. ஏனெனில் ஆத்மவிசாரம் எனும் நேர்வழி, ஒரு மனிதனது உள்ளார்ந்த உலகத்தை முற்றிலும் மாற்றி, மனதை முழுவதுமாக அடக்கும் முயற்சியாகும். இதில் ஒரு சிக்கல் என்னவெனில் எனது அகங்காரம் பணிய வேண்டும் என்பது எனக்குப் புரிந்தாலும் என்னுடைய முன்னாள் எஜமானன் ஆகிய அகங்காரம்,*

யாருக்கு அடங்க வேண்டும் என்பது புரியவில்லை. என்னுடைய பிரக்ஞை உணர்விலிருந்து நான் எனது எண்ணங்களின் ஓட்டத்தைக் களைய முற்பட்டபோது ஒரு சூன்யத்தையே சந்தித்தேன். இந்த சூன்ய உணர்வு மகிழ்ச்சி தராமல் ஒரு கிலியையே ஏற்படுத்தியது. மலையேற்றம் புரிகின்ற ஒருவன் உயர்ந்த மலையின் மீது ஏறியபின் தான் சுவாசிக்கப் போதுமான பிராணவாயு அங்கு இல்லை என உணர்ந்து, மூச்சுத் தடுமாறுவது போன்ற உணர்வு இது. எனவே நான் தியானம் மற்றும் விசாரம் செய்வதற்கான சூழ்நிலையை முதலில் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தேன்.

நாம் தினம் ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் ஒரு லட்சியம் குறித்துத் தீவிரமாக எண்ணும்போது, அதே சமயத்திலும் அதே இடத்திலும் எண்ணம் மீண்டும் ஒருமிப்பதைக் காண்கிறோம். இத்தகைய ஒழுங்குமுறை, நாம் தியானம் செய்வதை எளிதாக்கி, நமது முயற்சியையும் சுலபமாக்குகிறது. நான் இந்த வழிமுறையைப் பின்பற்றத் தீர்மானித்தேன். நான் ஞான நூல்களைப் பயில்வதற்கு வசதியான சூழ்நிலையில் உருவாக்கிக் கொள்ள முடிவு செய்தேன்.

எனது நண்பரான ரோமன் கத்தோலிக்கர் ஒருவர் பாரீஸ் நகரில் இருந்தார். நல்ல கல்விமானான அவர் எனது ஆன்மிக முயற்சிகள் குறித்து அறிந்து இருந்தார். அவருடன் நான் தொடர்பு கொண்டு இருந்ததால் என் பயிற்சி குறித்து அறிந்திருந்த அவர், என் முயற்சிகளுக்கு ஏதும் தடை கூறவில்லை. நான் அவருக்கு அமைதியாகத் தியானம் புரியத் தேவையான சூழ்நிலை அமைந்த ஓர் இடத்திற்குச் சென்று, சில மாதங்கள் அங்கே தங்கி ஆன்மிகப் பயிற்சி செய்ய விரும்புகிறேன் என்று அவருக்கு எழுதியிருந்தேன். அந்தக் கத்தோலிக்க போதகர் தன்னுடைய மடாலயத்திலேயே வந்து தங்கிக் கொள்ளலாம் என்று பெருந்தன்மையுடன் எழுதியிருந்தார். எந்த ஒரு கத்தோலிக்கரும் அந்த

*மடாலயத்தில் சிறிது காலம் தங்கி, தனது ஆன்மிகத் தேடலைத் தொடர்ந்து அங்குள்ள எளிய வாழ்க்கையில் பங்கு கொண்டு, அவரவரது ஆன்மிக நிலைக்கு ஏற்றபடி முன்னேற்றம் அடையலாம் என்று எழுதியிருந்தார். எனது தேடலுக்கு இது துணை செய்யும் பொருத்தமான இடம் என்று முடிவு செய்தேன்.*

*சில வாரங்களுக்குள் நான் எனது செயல்பாடுகளை முடிவு செய்து பாரிஸுக்கு சென்று, மடாலயத்தில் சேர்ந்தேன். அங்குத் தங்கியிருப்பவர்க்கு எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. நான் அந்த மடாலயத்தின் தலைமைத் துறவியுடன் சென்று, நான் ஐரோப்பாவை விட்டுச் சில மாதங்களில் நீங்கி, தென்திசை நாட்டிற்குச் செல்ல விரும்புவதாகக் கூறினேன். அவர் என்னுடைய நண்பர், ஃபாதர் N. தன்னிடம் முன்னமேயே என்னைக் குறித்துக் கூறி இருப்பதாகக் கூறினார்.*

*அந்தப் பரந்த கட்டிடத்தில் எனக்கு ஒரு சௌகரியமான அறை கிடைத்தது. அங்கே இன்னொரு துறவி வந்து 'எனக்குப் படிக்க நூல் ஏதேனும் வேண்டுமா?' என்று கேட்டார். அவரே, தாமஸ் கெம்பிஸ் எழுதிய Imitation of Christ என்ற நூலைப் படிக்குமாறு கூறினார். அந்த நூலைத் தான் படிக்க விரும்புவதாய் முன்னமேயே முடிவு செய்திருப்பதாக நான் கூறியது அவருக்கு மிக மகிழ்வூட்டியது. தன் துறவு ஆடைக்குள் அவர் வைத்திருந்த அந்த நூலை உடனே எடுத்துக் கொடுத்தார்.*

*முதலில் சில வாரங்கள், நான் முற்றிலும் தனிமையில் இருந்தேன். நான் திட்டமிட்டபடியே ஒரு துறவி வாழ்க்கையைப் பின்பற்றத் துவங்கினேன். என் லட்சியத்திற்கு அது பொருத்தமாய் இருப்பதைக் கண்டேன். காலையில் சிற்றுண்டிக்கு முன் அந்த தேவாலயத்தின் சித்திர கூடத்திற்கு நான்*

செல்வேன். முதல் தளத்தில் அமைந்திருந்த அந்தக் கூடத்தில் நாற்காலிகளும், காலை வேளைகளில் துறவிகள் அமர்ந்து பிரார்த்தனை கூறும் பீடங்களும் அமைந்திருந்தன. இந்த அமைதி தவழும் அறையில் நான் தினம் அமர்ந்து தியானிக்கலானேன். காலை உணவிற்குப் பின் நான் என் அறையில் அமர்ந்து அன்றைக்கு நான் தேர்ந்தெடுத்திருந்த நூல்களைப் பயிலலானேன். மதிய உணவுக்குப் பின், சில நாட்களில் அந்த நகரின் பிரசித்தி பெற்ற இடங்கள் சிலவற்றிற்குச் சென்று வரலானேன்.

இதற்கிடையில் தீவிரமான செயல்பாடுகள் ததும்பும் இந்தப் பெருநகரில், என் மனதினை அமைதியில் நிலைப்படுத்தும் முயற்சியில் ஈடுபடலானேன். பதினாறாம் பகுதியில் நான் விவரித்துள்ள ஆத்ம விசார நிலையிலும் தீவிரமாக ஈடுபடலானேன்.

சில நாட்களில், வைகறைப் பொழுதில் அரை இருட்டில் தேவாலயத்தில் நான் நாற்காலியில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்து இருப்பேன். இங்ஙனம் நான் நீண்ட நேரம் தியானத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட ஒரு மடாலயத் துறவி, இங்ஙனம் நீண்ட நேரம் தியானத்தில் ஆழ்ந்திருப்பது எனது உடல் நலத்திற்கு ஊறு செய்யும் என்று எடுத்துரைத்தார். நமது உடல் மிக மிருதுவான ஒன்று. அதனைக் கடுமையான முறையில் பயன்படுத்தினால் அது நாம் இறைவனுக்குச் செய்யும் சேவைக்கே ஊறு விளைவிக்கும் என்று அவர் கூறினார். நான் அவரிடம், எதுவரை எனது உடல் வலிவின் எல்லை என்று எனக்குத் தெரியும். நான் எதுவரை அதனைச் செயல்படுத்த முடியும் என்பதை அறிவேன் எனக் கூறி, அவர் என்மீது காட்டிய சிரத்தைக்கு நன்றியைத் தெரிவித்தேன்.

வெளி உலகத்திலிருந்து உயர்ந்த மதில்களால் பிரிக்கப்பட்ட இந்தச் சிறந்த மடாலயத்தின் வெவ்வேறு

பகுதிகளை நான் சென்று கண்டேன். அங்குப் பணி செய்யும் சமையல்காரர்கள், பணியாளர்கள், தோட்டக்காரர்கள், தையல் பணியாளர்கள் அனைவரிடமும் நான் உரையாடினேன். இவர்கள் அனைவருமே இந்த மடாலய அமைப்பைச் சேர்ந்தவர்களே. ஒவ்வொருவருக்குமே ஒரு குறிப்பிட்ட பணி தரப்பட்டு இருந்தது. காலை வேளையில் அவர்கள் தேவாலய மத குருவிற்கு உதவி புரிந்த பின்னர் தம் பணிக்குச் செல்வர். பகல் வேளைகளில் தமது பணிகட்கு இடையே சிறிது நேரம் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுவர்.

அவர்கள் மிக எளிய மனிதர்கள். பக்தியும் நட்புணர்வும் மிகுந்த மக்கள். இளம் பிராயத்திலிருந்தே மடத்துச் சேவையிலேயே தம் வாழ்நாளைக் கழித்து வருபவர்கள். சில சமயங்களில் அவர்கள் அந்நாட்டில் உள்ள வேறு ஒரு மடாலயத்திற்கு மாற்றப்படுவர். எதனையுமே அவர்கள் கேள்வி ஏதும் இன்றி ஏற்றுக் கொள்வர். அவர்தம் நடத்தையில் இருந்துதான் ‘பற்றற்ற வாழ்க்கை’ என்பதன் பொருளையும் அது ஆன்மிக முயற்சியில் எங்ஙனம் உயர் இடத்தை வகிக்கிறது என்பதையும் அறிந்து கொண்டேன்.

நமது பழைய எதிரியான அகங்காரத்தை ஒழிக்க இதுவும் ஒரு வழி என அறிந்துகொண்டேன். சிறிதளவு கல்வி பயின்றவர்களே ஆன்மிகப் பாதையில் முன்னேற இது மிகப் பொருத்தமான வழி.

நான் பணியாளர்களிடம் நீங்கள் தேர்ந்து எடுப்பது பிரார்த்தனையா அல்லது சமூக சேவையா என்று கேட்டபோது சமூக சேவையும் ஒரு பிரார்த்தனைதான் என்று அவர்கள் விடையிறுத்தனர்.

மூன்றாண்டுகளுக்குப் பின் நான் இந்தியா வந்த பின்னர் இமாலயத்தில் ஆசிரமம் நடத்தி வரும் பிரசித்தி


*பெற்ற இந்திய யோகி ஒருவர் எழுதியிருந்த சிறு நூல் ஒன்றினைக் கண்டேன். அதன் தலைப்பு 'தொழிலே தெய்வம்; அதை இறைவனுக்கு அர்ப்பணிப்பாயாக!'*

*இப்போது நான் உலக உயிர்கள் அனைத்தையும் பரம்பொருளுடன் பிணைக்கும் இந்தக் கண்ணுக்குப் புலப்படாத ஆன்மிகப் பிணைப்பினைக் கண்டு கொண்டேன். மேலை நாட்டில் பிறந்த ஒரு பெரும் ஆசானின் ஆலயத்தில் நான் அமர்ந்திருந்தபோது, நான் பின்பற்றும் கிழக்கிந்திய ஞானவழி எங்ஙனம் மேலைதத்துவ பாதையிலிருந்து முரண்படாமல் ஒத்திருக்கிறது என்பதை உணர்ந்தேன்.*

*இச்சமயத்தில், ஸ்ரீ மகரிஷியின் ஆசிரமம் எனக்கு அறிவுறுத்தியவாறு, பாரிஸ் ராமகிருஷ்ண மடம் தலைவர் சுவாமி எஸ். என்னும் புகழ்மிக்க துறவியை சந்தித்தேன். அவர் எப்போதும் பல்வேறு வேலைகளில் மூழ்கி இருப்பார். ஆயினும் திருவண்ணாமலை ஆசிரமத்திலிருந்து எனக்கு வந்த கடிதத்தைக் கண்டவுடன், உடனே என்னைக் காண ஒப்புக்கொண்டார். எங்கள் உரையாடலின்போது அவர் கூறினார், உங்களது ஆன்மீக குரு ஸ்ரீ மகரிஷி ஆவார். அவரிடம் உதவி வேண்டுங்கள். நிச்சயம் அது உங்களுக்குக் கிடைக்கும். என்னுடைய ஆன்மிக சாதனையில் எனக்கு வரும் சில இடையூறுகளை அவரிடம் கூறியபோது, எனது ஆசானுடன் எனக்குத் தொடர்பை ஏற்படுத்தித் தரும் மந்திரத்தை அவர் உபதேசித்தார். ஓம், ரமண, ஓம்! என்பதே அது.*

★ ★ ★

*மாதங்கள் பல கழிந்தன. விசாரப் பாதையில் என் மனம் வேரூன்றி விட்டது. ஆயினும் ஒரு மனிதனின் ஜீவிதத்தை முழுமையாக மாற்றும் உயிர் சக்தியாக இன்னும் அது பரிணமிக்கவில்லை. அது பின்னர் தென் அமெரிக்காவில் எனக்குப் பூர்த்தியானது. இப் பூரண*



நிலையைக்கூட மகரிஷியின் சந்நிதியில் நான் பெற்ற ஆத்மிகப் பேரொளியுடன் ஒப்பிட முடியாது.

நம்முடைய இக்கால ஆத்மிகத் தேவைக்கான இந்த ஆத்ம விசாரம் என்னும் சக்தி வாய்ந்த நமக்கு அளித்த மஹா வியக்தியான பகவானே நம் வாழ்வின் தலைவன் என நான் அறுதியிட்டுக் கூறுகிறேன்.

அவர் இந்த அகண்டாகார விருத்தி, பரம்பொருள் ஆகிய தூய ஒன்றுடன் இரண்டறக் கலந்துவிட்டார்.

ஆன்மிக மஹா சமுத்திரத்தை நாடிச் செல்லும் சிறு கிளை நதிகளான நம் போன்ற அனைவருக்கும் இந்த எல்லையற்ற பேரானந்த சாகரத்தைத் தவிர வேறு எந்த நோக்கமாக அமைய முடியும்?

# ஔவைக் குறள்

## 4. நாடிதாரணை

*1. எழுபத்து ஈராயிரம் நாடிஅவற்றுள்*
*முழுபத்து நாடி முதல்.*

பொருள்: இந்த மனித உடம்பில் எழுபத்து இரண்டாயிரம் நாடிகள் உள்ளன. இவற்றில் முதன்மையானது பத்து நாடிகள்.

விளக்கம் : இந்த உடலானது எழுபத்திரண்டாயிரம் நாடிகளால் (Energy channels) அமைக்கப்பட்டது. அவை மாறி, மாறிக் கலந்து விளங்கும் அவற்றுள் அத்தி, அலம்புடை, இடா, பிங்கலா, சுஷூம்னா, குகு, சங்கினி, சிங்குவை, புருஷன் என்னும் பத்து நாடிகள் முதன்மை ஆனவை என்று சித்தர் சாஸ்திரம் கூறும்.

*2. நரம்பெனும் நாடி இவையினுக் கெல்லாம்*
*உரம்பெறு நாடிஒன்று உண்டு.*

பொருள்: நரம்புகள் என்றும் கூறப்படுகின்ற இந்த நாடிகட்கு எல்லாம், தலைமையாகிய மிகச் சக்தி வாய்ந்த நாடி ஒன்று உள்ளது. இதுவே அனைத்துக்கும் ஆதாரம்.

*3. உந்தி முதலாய் உறுமுடிகீழ் மேலாய்*
*பந்தித்து நிற்கும் பரிந்து.*

பொருள்: தொப்புள் முதல் தலை உச்சிவரை இந்த நாடிகள் கீழ்மேலாய் பதிந்து இருப்பவை ஆகும்.

விளக்கம்: எழுபத்திரண்டு ஆயிரம் நாடிகள் அமைப்பானது நமது சரீரத்திற்கு ஆதாரம். அதன் மூலம் தொப்புள். அங்கிருந்து இடம் வலமாகவும், வலம் இடமாகவும் இந்த நாடிகள் பின்னிப் பிணைந்து நிற்கும்.

*4. காலொடு கையின் அடுவிடைத் தாமரை*
*நூல்போலு நாடி நுழைந்து.*

*பொருள்: (தொப்புளில் இருந்து எழும் இந்த நாடிகள்) கைகளிலும் கால்களிலும், நடு இடங்களிலும் நுண்ணிய தாமரை நூல் போலக் கலந்து இருக்கும்.*

*5. ஆதித்தன் தன் கதிர்போல அந்நாடிகள்*
*பேதித்துத் தாம் பரந்தவாறு.*

*பொருள்: அந்த நாடிகள் சூரியனது கிரணங்கள் போல் தம்முள் பேதித்து, கலந்து நிற்கும்.*

*விளக்கம்: மனித உடம்பில் இந்த எழுபத்திரண்டாயிரம் நாடிகளும் சூரியக் கதிர்போல, மாறிமாறி பரவிக் கலந்து இருக்கும்.*

*'பேதித்து' என்பது நாடிகள் கத்திரிக்கோல் மாறி வருவதுபோல் வலம், இடமாக மாறி இருக்கும். 'தாம் பரந்தவாறு' என்பது அது தன் ஸ்வபாவம் படியே செயல்படுவதைக் குறிக்கும்.*

*இவை தம்முள் பிணைந்திருப்பது உயிரின் அடிப்படை க்ரோமோஸோம்களின் 'Double Helix' அமைப்பை ஒத்திருப்பதை, இக்குறள் கூறும் நாடிகள் கட்டமைப்பு சுட்டுகிறது.*

*6. மெய்எல்லாம் ஆகி நரம்போடு எலும்புஇசைந்து*
*பொய்யில்லை நாடிப் புணர்வு.*

*பொருள்: நரம்புகளின் கூட்டுறவு ஆனது உடல் முழுவதிலும் எலும்புகளுடன் தொடர்புகொண்டு இருக்கும். இது மெய்யானது ஆகும்.*

*(உடற்கூறு சாஸ்திரத்தில் எலும்புகளும், நரம்புகளும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கும் என்னும் உண்மையினை இக்குறள் கூறுகிறது.)*

*7. உந்தி முதல்ஆகி ஓங்காரத்து உட்பொருளாய்*
*நின்றது நாடி நிலை.*

*பொருள்: தொப்புளில் தொடங்குகின்ற நாடிகள், ப்ரணவத்தை உட்பொருளாகக் கொண்டு உடல் முழுவதும் பரவி இருக்கும்.*

விளக்கம்: ஓங்காரமே படைப்பு அனைத்திற்கும் ஆதாரம் என வேதம் மொழிகிறது. இந்த சரீரத்தின் அடிப்படை பரவி இருக்கும் நாடிகள். இந்த நாடிகள் துலங்கும் இடமும் தொப்புள். இந்தத் தொப்புளிலிருந்துதான் ப்ரணவம் எழுகிறது. இதைத் தியாகராஜரும் "ஸோபில்லு ஸப்தஸ்வர்" என்ற கீர்த்தனையில் நாபியிலிருந்துதான் அனைத்தும் எழுகிறது என்று கூறுகிறார். எனவே நாடிகளின் நிலையே ஓங்காரத்திற்கும் ஆதாரமாகும்.

*8. நாடிகள் ஊடுபோய்ப் புக்க நலஞ்சுடர்தான்*
*வீடு தருமாம் விரைந்து.*

பொருள்: இந்த நாடிகள் வழியே சூட்சுமமாய்ச் செல்லும் ஆத்ம ஜோதியான ஒன்று விரைவில் வீடுபேறு அளிக்கும்.

விளக்கம்: கடவுள் ஒவ்வொரு ஆத்மாவிலும் நாடிகள் ஊடே கலந்து பிரகாசிப்பவன். அதில் ஜோதி வரவாய்ப் பிரகாசிப்பவன்.

*வெளிவளி தீநீர் மண்பல உயிராய்*
*விரிவுறு பூதபௌதிகங்கள்*
*வெளிஒளி உன்னை அன்றி இன்றென்னில்*
*வேறுயான் யாருளன் விமலா!*

என்று பகவான் கூறுகிறார் (அருணாசல பதிகம், 7). எங்கும் பரவியிருக்கும் ஆகாயம், காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களும், அவற்றின் கலப்பாய்த் தோன்றுகிறான். பௌதிகப் படைப்புகளும், உயிர்களும் ஜோதி ஸ்வரூபமான உன்னையன்றி வேறு எதுவும் இல்லை. இதை உணர்வதே வீடுபேறு ஆகும். வீடுபேறு நம் இதயத்துள்ளே உள்ளது அன்றி, வெளியே இல்லை என்பது ஔவையாரின் உபதேசம்.

*9. நாடி வழக்கம் அறிந்து செறிந்துஅடங்கி*
*நீடுஒளி காண்பது அறிவு.*

பொருள்: நாடிகள் ஸ்வபாவத்தை நன்கு அறிந்து, அவை செயல்படும் வழியே உள்நோக்கிப் பயணித்து இதயத்தில் ஒடுங்கி, ஆத்ம தேஜஸை அறிவதே ஞானமாகும்.

*"திரும்பி அகந்தனை தினமகக் கண்காண்*
*தெரியும் என்றனை என்அருணாசலா"*

எனப் பகவான் மணமாலை 44ஆவது பாடலில் இதையே கூறுகிறார்.

*10. அறிந்துஅடங்கி நிற்கும் அந்நாடிகள் தோறும்*
*செறிந்துஅடங்கி நிற்கும் சிவம்.*

பொருள்: அனைத்தையும் அறிந்து, அடங்கி இருக்கின்ற அந்த நாடிகளில் எல்லாம் சிவம் நிறைந்து மறைந்து இருக்கும்.

விளக்கம்:

*"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்*
*மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"*

என்கிறது தேவாரம். அரணிக் கட்டையில் மறைந்துள்ள அக்னி அதனைக் கடைவதால் வெளிப்படுகிறது. பாலில் இருக்கும் வெண்ணெய் அதனை மத்துகொண்டு கடைவதால் வெளிப்படுகிறது. மாணிக்கத்தில் மறைந்திருக்கும் ஒளி அதனைக் கருவிகொண்டு கடைவதால் பிரகாசமாய் வெளிப்படுகிறது. இறைவனுடன் நீங்காத பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டு, உறவு என்னும் மத்து (கடையும் கருவி), உணர்வு என்னும் கயிறைக்கொண்டு நிலையாகக் கட்டி, ஆத்மிக சாதனை என்னும் கடைதலில் ஈடுபடும்போது, அந்த பகவத் ஜோதி முன்னே எழுந்து நிற்கும் என்ற கருத்தை ஒளவை அழகாகக் கூறுகிறார்.

# ரமணாயனம்

## க்ரேஸி மோஹறன்

### சுந்தர காண்டம்

*அருந்தவப் பிள்ளை அருகிருக்க அன்னை*
*திரும்பவும் வந்தவள் நோயால் – வருந்திட*
*வேண்டுதல் வேண்டாமை தாண்டியவர் ஆண்டவனை*
*வேண்டினார் வெண்பா விடுத்து....(193)*

*[அன்னையார் அருணாசலத்தில் நோயுற்றபோது, அவர் நோய்த் துன்பம் நீங்க, பகவான் வெண்பாவால் இறைவனுக்கு வேண்டுகோள் விடுத்தார். அன்னை உடற்பிணியும் நீங்கியது. பாக்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.]*

**பகவான் தன் தாயார் குணமாக இயற்றிய நான்கு வெண்பாக்களில் ஒன்று**

*காலகா லாவுன் கமல பதம்சார்ந்த*
*பாலன் எனைஈன்றாள் பாலந்தக் – காலன்தான்*
*வாரா வகையுன்கால் வாரிசமே காட்டுவா*
*யாராயினும் காலனுமே யார்....(194)*
*(வாரிசம்-தாமரை)*

*[இறைவா! உன் தாமரைத் தாள் காட்டியவுடன் காலனுமே நீங்குவான் என்கிறார் பகவான்]*

*பதினாறைப் பெற்றோன் பெருவாழ்வைப் போக்க*
*எதிராக வந்த எமனை – குதிகாலால்*
*மாய உதைத்த மகாதேவா மைந்தனென்*
*தாயை அவன்நெருங்கத் தடு....(195)*

*[மார்க்கண்டேயன் கதை]*

*சாகா வரம்பெற்ற சேயால் உரமுற்று*
*போகாத தாயாரைப் புண்படுத்த – ஆகாதோர்*
*''இங்கில்லா விட்டால் இடம்வேறு எங்கேனும்*
*தங்கிடலாம் வாவென்றார் தாய்க்கு''....(196)*

*[பகவானுடன் இருந்த அடியார்கள் சிலர் அன்னை பகவானுடன் தங்கி இருப்பதை விமர்சித்தனர். மனம் வெதும்பிய தாயிடம் இந்த இடம் இல்லாவிட்டால் வேறு எங்கேனும் போகலாம் என்று கூறினார்]*

*ஆகாதோர் அச்சமுற்று அண்ணல் அடிபணிந்து*
*போகாதீர் என்று புலம்பிட – த்யாகேசன்*
*ஆதரிக்கத் தானே அமர்ந்துள்ளேன் நானென்றப்*
*போதுரைத்தார் புன்முறுவல் பூத்து....(197)*

*[பயந்துபோன அடியார் வேண்டிட பகவான் தன் முடிவினை மாற்றி அங்கேயே அமர்ந்தார்]*

*முன்காவி சங்கரர் பின்கரும்பு பட்டினத்தார்*
*தன்தாயார்க்(கு) ஈமத்தீ தந்தனரே – என்கோவில்*
*பாசமிகு அன்னை புழங்கும் இடமென்றார்*
*கோசல ராமனாய்க் கோன்....(198)*

*[சங்கரரும், பட்டினத்தாரும் செய்ததுபோல் பகவானும் தன் தாய்க்கு ஈமச் சடங்குகளைச் செய்தார்]*

*அன்னைக்கு மிக்கதோர் ஆலயம் ஏதுதந்தை*
*சொன்னசொல்லுக்(கு) ஈடாய் சுருதியுண்டோ – பின்னர்*
*பிதாவுக்குப் போடாத பிட்ஷையை ஏற்க*
*கதாபுருஷன் கொண்டார் கடுப்பு....(199)*

*ராமனாத சாமி ரமணபிட்ஷை ஆனபின்பு*
*தாமதமாய் தந்தைக்(கு) உணவளிப்பார் – கோமணத்தார்*
*அப்பனுக்கு இட்டபின்பு அப்புறம் மீந்ததையிச்*
*சுப்பனுக்கு போடென்றார் சோறு....(200)*

*[ராமனாதரிடம் எனக்கு பிட்சையிட வேண்டும் என்று தந்தையைக் காத்திருக்கச் செய்யாதே. முதலில் அவருக்கு உணவளி என்றார் பகவான்]*

*அப்பனாய் லட்ஷணமாய் அன்பு மகள்பசிக்கு*
*உப்பிடாத உன்ஞானம் எப்பவும் – தப்புடா*
*சுப்புரா மய்யா சிசுதெய்வ ரூபேண*
*செப்பினார் சம்சார சத்து....(201)*

*[பகவானுக்கு முதலில் உணவிட வேண்டும் என்று சிறிய மகளைப் பசியால் காக்க வைத்த சுப்பராமய்யாவை பகவான் கடிந்து கொள்வார்]*

*தலைகாயும் வெய்யில் தரையெல்லாம் முட்கள்*
*மலைப்பாதை சுற்றும் மடையா – இளைப்பாறி*
*சும்மா இருந்து சுகம்காண மாட்டாதுன்*
*இம்மாம் தொலைவு இழுக்கு....(202)*

*கல்லினில் முள்ளினில் காய்கின்ற வெய்யிலில்*
*பிள்ளைநீ வந்தது பேதமை – சுள்ளி*
*பொறுக்கும் கிழவி உருவத்தில் வந்து*
*பொருப்புத் தகப்பன் உரைப்பு....(203)*

*[சுள்ளி பொறுக்கும் கிழவி பகவான் பதைபதைக்கும் வெயிலில் மலை மேல் சுற்றுவதைக் கண்டித்தல்]*

*திட்டாய் இருந்தாலும் தீக்கண் இறையோனின்*
*திட்டம் இதுவாய்த் தெளிந்து – மட்டம்*
*அடித்தார் மலைசுற்றல் அன்றுமுதற் கொண்டு*
*படித்தார் இகத்தில் பரம்....(204)*

*[அந்தக் கிழவியின் சொல்லை இறைவனின் சொல்லே என்று கொண்ட பக்தன் அதுமுதல் வெயிலில் சுற்றுவதைத் தவிர்த்தார்]*

*போட்டி இடுவார்கள் பிட்ஷை இடுவதற்கு*
*பாட்டிகள் சேர்ந்து பகவானுக்கு – ஏட்டில்*
*எழுத இயலாது ஏழைக் கிழங்கள்*
*தொழுத விதம்தான் தவம்....(205)*

*முதலாக எச்சம்மா, மூன்றில் நடுவே*
*முதலியார் பாட்டி, முடிவில் – உதவியாய்*

*சோறை ரமணருக்(கு) சேகரித்து வந்தவள்*
*கீரைக் கிழவியாம் காண்....(206)*

*வயணமாய் அன்னம் வடித்தஅம் மூவர்*
*அயனரி தீவாய் நயனன் – பயணமாய்*
*பூமி உகந்தகுரு சாமிக்(கு) உதவிட*
*நேமி, நூல், சூலத்தின் நட்பு....(207)*

*சதியனு ஸூயா துதிசெய்ய வந்த*
*பதிமூவர் தத்தகுரு பாலர் – அதுபோலே*
*தத்த ரமணருக்கு தாய்மை பரிந்தனர்*
*பித்தனயர் மால்பாட்டி போல்....(208)*

*[ஸதி அநுஸூயா முப்பெரும் இறைவர்களை - பிரம்மா, விஷ்ணு, சிவன் - குழந்தையாக்கி உணவளித்தார். அந்தக் குழந்தையே தத்தாத்திரேயர். அதுபோன்றே இந்த அன்னையர் மூவரும் பகவானைக் குழந்தையாய் உணவளித்தனர்]*

*மலங்கா ரமணர் முதலியார் பாட்டி*
*அலங்காரத் தம்மாவின் அன்பாம் – விலங்கில்*
*அகப்பட்(டு) இருமுறை அன்னத்தை உண்டு*
*உகப்பார் அவள்வார்த்தைக்(கு) உற்று....(209)*

*பானையும் ஒன்று பகவானும் ஒன்றுதான்*
*ஸ்நானமும் சோறுமதில் ஆனபின் – ஞானமாம்*
*பானை பிடித்திடும் பாக்கிய சாலியாய்*
*ஊனைக்கீ ரையாள் உதிர்ப்பு....(210)*

*[கீரைப்பாட்டி உணவளித்தல்]*

*பசலையாம் கீரை பகவான் அகத்துக்*
*குசலமாம் கீரைக் கிழவி – அசலமாய்*
*நின்றாள் இறந்தும் நிமலர் வளர்த்தஆக்*
*கன்றாய்ப் பிறந்தாள் கனகு....(211)*

*[கீரைப்பாட்டி பின்னர் பசு லட்சுமியாய்ப் பிறக்கிறாள்]*

*பரத இரத்தினம்மா பால முனிக்கு*
*விரதமாய் சோறிடுவாள் வாயில் – உறுதியாய்*
*அண்டம் மறந்தமர்ந்து ஆன்மா லயித்ததால்*
*கண்டம் இறங்காதாம் காற்று....(212)*

*[கோயில் நடனமாது ரத்னம்மா தன்னுள்ளே ஆழ்ந்திருந்த பகவானுக்கு வாயில் உணவூட்டல். பல சமயம், அதைக்கூட விழுங்காமல் மறுநாள்வரை வாயிலேயே இருக்கும்]*

*தாசியா னாலுமவள் ஆசிரம வாசியே*
*பாசப் படிதாண்டா பத்தினி – ஆசியாய்*
*ரத்தினம் மாளின் ரகசிய பக்திக்கு*
*இத்தரையில் ஈடே(து) இயம்பு....(213)*

*கம்மாள மீனாட்சி அம்மாள் அதிகாரம்*
*கும்மாள மிட்டதைக் கூறியவர் – ''அம்மா!*
*பகவானை வாழும் பரிதாபம் இந்த*
*பகவானுக் கேதான் பகல்''....(214)*

*மடிந்தால் மகனுன் மடியில்தான் என்று*
*கிடந்த அழகம்மை கொண்ட – அடம்தன்னை*
*பாரா முகமாய் பகவான் இருந்தடக்க*
*நீராய்ச் சொரிந்தாள் நிலத்து....(215)*

*அம்மா அழுகைக்கும் ஆகாத் தியத்திற்கும்*
*சும்மா இருந்தபின் செப்பினார் – எம்மால்*
*உனக்குமட்டும் சேயாய் உறவாடல் ஆகாது*
*தனக்கெல்லாப் பெண்களுமே தாய்....(216)*

*கோசலையாய் ராமன்தாய் கைகே கியைமாற்ற*
*ஆசிரமம் சேர்ந்தாள் அழகம்மை – தேசுடை*
*காவி அணிந்துமகன் காரியாம் யாவிலும்*
*மேவிக் கரமளித்தாள் மாது....(217)*

*அன்னையன்(று) இட்ட அடுப்புதீ வேள்வியில்*
*இன்னமும் ஆசிரமம் உண்கிறதாம் – அண்ணனுடன்*
*தம்பிநாக சுந்தரமும் தங்க நிரஞ்சனனாய்*
*தும்பிகள் சேர்ந்தனவாம் தேன்....(218)*

# அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம்

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

***பகுதி 12***

*இறைவனின் தன்மையை விளக்கும் தத்துவங்கள், அவனுடைய எளிமையையும் கருணையையும் பெரிதும் போற்றிப் புகழ்கின்றன. அவன் பக்தர்களுக்காக எதையும் செய்யக் கூடியவன். சிறிய காணிக்கையையும் பெரிதாக எண்ணுபவன். எளிதில் அடையக்கூடியவன் (சௌலப்யம் எனப்படும் குணம்). எண்ணிலா குணங்களுடையவன் (சௌசீல்யம் எனப்படும் குணம்). ஆதலால் அடியவர்கள் அவனை எளிதில் அடைந்துவிட முடியும். அவனே அடியார்களைத் தடுத்தாட்கொண்டு நற்கதி அளிக்கிறான்.*

*இது ஒரு புறம்.*

*மற்றொரு பக்கம் ஆயிரக்கணக்கான ஆத்மாக்களில் மிகச் சிலரே அவனை அடைகின்றனர் என்றும் அறிகிறோம். ஜீவாத்மா பல்வேறு பிறவிகளெடுத்த பின்னரே பரகதியை அடைகிறது. உயர்ந்த சான்றோர்கள்கூட அவனை அடைய முடியாமல் தவிக்க நேர்ந்த பல வரலாறுகளை நாம் காண்கிறோம். மாணிக்கவாசகரும் 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய்....' என்று புவியில் பல பிறவிகள் எடுத்த பின்னரே மனித வாழ்வு கிட்டுகிறது. அதன் பின்னராவது பரமபதம் கிடைக்கிறதா என்றால், அதுவும்இல்லை. இன்னும் பல பிறவிகள் எடுக்க வேண்டும் என்னும் நிலை. 'பேயாய்க் கணங்களாய்,*

வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்.... எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்' என்று திருவாசகத்தை இயற்றிய புண்ணிய புருஷரே சொல்வார் என்றால் மற்றவர் கதி என்னாவது?

இரண்டு மாறுபட்ட நிலைகள்.

இதற்கு விளக்கம் மஹாபாரதத்தில் உள்ள விஷ்ணு சகஸ்ரநாமத்தில் கிடைக்கிறது. இது பக்தி, வேதாந்தம் ஆகிய இரண்டு மார்க்கங்களுக்கும் பாலமாக அமைவது. உபநிஷதங்களுக்கும் பிரம்ம சூத்திரத்திற்கும் உரை எழுதிய ஆதிசங்கரர், இதற்கும் உரை எழுதினார் என்பது தத்துவ உலகில் இதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும். இதில் பரமனை சுலபத்தில் அணுக முடியாத 'துர்லபன்' என்று ஒரு இடத்திலும் வேறு ஒரு இடத்தில் அவன் எளிதில் அடையக் கூடிய 'சுலபன்' என்றும் விளக்குகிறது. இறைவனுக்கு இரண்டு பக்கமா? இதை ஆராயவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்

ராம பக்தியில் திளைத்தவர் தியாகராஜர். அவர் பல விதங்களிலும் ராமனை வணங்கியும் அவனுடைய கருணை கைகூடாத நிலையில், மனம் நொந்துபோய் 'நீ உன் கருணையைக் காட்டுவதிலும்கூட அதை ஒரு வாணிபப் பொருள் போல பேரம் செய்கிறாயே, இது தகுமோ?' என்று குற்றம் சாட்டுகிறார். ஆனால் ராமன் அவருக்கு துர்லபனாக ஆவதில்லை. அவரை நாடி அவர் இருப்பிடத்திற்கே நடந்து வருகிறான். சுலபன் என்னும் தன் குணத்தை உலகிற்குக் காட்டுகிறான். (நனு பாலிம்ப நடசி). இந்த வரலாறு நம் ஆராய்ச்சிக்கு ஒரு நல்ல ஆரம்பம்.

அர்த்த பஞ்சகம் என்னும் நூல், பிள்ளை லோகாச்சாரியார் என்னும் வைணவப் பெருமானால் இயற்றப்பட்டது. இதில் மெய்ப்பொருளை அடையும் மார்க்கத்தை அவர் விவரிக்கிறார். இதற்கு ஐந்து

*விஷயங்களை அவர் முன்வைக்கிறார். முதலில் நான் யார் என்னும் அறிவு தேவை. இதுவே ரமணர் பலமுறை சொல்லிய ஞானம். இரண்டாவது, அடையப்பட வேண்டிய பரம்பொருள் பற்றிய அறிவு. இதை சித்தாந்தங்கள் விளக்குகின்றன. மூன்றாவது நாம் எதை அடைய விரும்புகிறோம் என்னும் விசாரம். இதைப் புருஷார்த்தம் என்று கூறுவர். உலகியல் இன்பங்களையே வேண்டினாலும் அவன் அளிக்கிறான். சொத்து, சுகம், மனை, பொருள், வெற்றி, பதவி என்று நாம் பலவற்றை வேண்டுகிறோம். இறைவன் அவரவர் தகுதிக்கேற்ப அவற்றை வழங்குகிறான். ஆனால் நாம் அவனையே பெரும்பேறாகக் கருதி அவனைத் தரும்படி வேண்டுவதில்லை. அவனும் நாம் யாசிக்காததால் ஞானம் என்னும் பேற்றை அளிப்பதில்லை. இதனால் நாம் அவனை அடையமுடியாத துர்லபனாக்குகிறோம். நான்காவது, பரம்பொருளை அடையும் வழி. இதற்கு 'உபாயம்' என்று பெயர். ஐந்தாவது, இந்த வழியில் செல்ல உள்ள தடை என்ன என்று அறிவது. இதற்கு நம் உத்தேசித்த பலனை அடைய ஏற்படும் 'விரோதி' என்று சொல்லுவர்.*

*ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோரூபம் ப்ராப்துஸ்ச ப்ரத்யகாத்மந:*
*ப்ராப்தி உபாயம் பலம் ப்ராப்தே: ததாப்ராதி விரோதிச ந*
*வதந்தி ஸகலாவேதா: ஸேதிஹாஸ புராணகா:*
*முநயச்ச மஹாத்மாநோ வேத வேதார்த்த வேதிந: நந*

*பரம்பொருளை அடைதல் என்பதே சான்றோரின் லட்சியம். இதை மோக்ஷகாங்க்ஷீ என்று குறிப்பிடலாம். உலகியல் பயன்களிடம் பற்றை நீக்கி, வீட்டுப் பேற்றை விரும்புபவனே இந்நிலையில் பார்க்கப்படுபவன். மற்றவர்கள் அற்பப் பலன்களை யாசித்து அதில் திருப்தி கொண்டு சம்சாரக் கடலில் தள்ளாடுபவர்கள். அந்த அளவில், அவரவர் விரும்பும் உலகியல் காமங்களை அளிப்பதால் சுலபனாகவும், வீட்டுப் பேற்றைப் பொறுத்தவரை துர்லபனாகவும் இறைவன்*

அமைகிறான். இந்நிலையில் அர்த்த பஞ்சகத்தில் குறிப்பிட்டுள்ள ஐந்து குணங்களும் விளக்கமாகிறது. '

1. நான் ஆசாபாசங்களால் தூண்டப்பட்ட ஜீவன். ஆத்மாவின் மேலான நிலையை அறியாத சாதாரணன்.

2. பரம்பொருள் பற்றிய அறிவு வரன்களை அளிக்கும் சக்தி படைத்தவன் இறைவன் என்னும் அறிவு. இது அவனுடைய உண்மைத் தத்துவத்தை அறியாத சீவனின் நிலை.

3. எதை அடைய விரும்புகிறோம்? எனக்கு நிறைய பணம் வேண்டும். இது காமகாமி என்னும் படியில் இருப்பவனின் உள்ளம்.

4. அடையும் வழி. நம் குறைகளைச் சொல்லி அழுவது. மேலான வழிகள் பல இருந்தாலும் ஜீவன் அவற்றைத் துறந்து இறைவனிடம் 'இதைக் கொடு, அதைக் கொடு' என்று வேண்டும் ஸ்திதி. இதையும் இறைவன் ஏற்றுக் கொள்கிறான்.

5. இந்த வழியில் செல்ல உள்ள தடை தெரியவில்லை. என்னுடைய ஆசைகளை இறைவன் பூர்த்தி செய்யவில்லை என ஏங்கும் இந்த வ்யக்தி, முடிவில்லாத ஆசை வலையில் வீழ்ந்து கிடக்கிறான். இதுவே அவனுடைய விரோதி, அதாவது அவனே அவனுக்கு எதிரி. (ஒப்-ஆத்மைவ ரிபுராத்மன: கீதை). ஆனால் அதை அவன் உணர்வதில்லை

இதைப் படிக்கும்போது நமக்கு ஒரு விஷயம் தெளிவாகிறது. இந்த 'நான்' என்னும் ஆசாபாசங்களால் தூண்டப்பட்ட ஜீவன் முடிவற்ற ஆசைகளை உடையவன். ஒவ்வொரு ஆசையும் மற்றொரு ஆசையின் விளைவு. அது நிறைவேறினால், வேறொரு ஆசை கிளம்பும். இல்லையென்றால், தடைபட்ட ஆசை க்ரோத்தையும், வெறுப்பையும், பொறாமையையும்

தூண்டும். இந்த ஆத்மாவுக்கு பிரம்ம நாட்டம் இல்லை. சம்சார நாட்டம் மட்டும்தான் உள்ளது என்பது கண்கூடு

இப்பொழுது பிள்ளை லோகாச்சாரியார் அர்த்த பஞ்சகத்தில் குறிப்பிட்ட ஐந்தாவது நிலைக்கு வருவோம். இந்தப் பாதையில் விரோதி யார் என்னும் கேள்விக்கு விடை கிடைத்து விட்டது. இதில் விரோதி, நாம்தான். நமக்கு, நம்மைப் பற்றிய அறிவும் இல்லை, பரம்பொருளையும் தெரியவில்லை. நம் லட்சியமும் சரியில்லை. இந்த விதத்தில் முதல் மூன்று நிலைகளில் நமக்குத் தெளிவில்லாததால், கடைசி இரண்டு நிலைகளான பாதையும் விரோதியும் பற்றிய விசாரம் தேவையற்றதாகிறது.

இறைவனை நாம் துர்லபனாக்கிவிட்டோம். இது யார் குற்றம்? எளிய அவனை சௌலப்யம் என்னும் குணம் கொண்ட கோமள புருஷனை - நம்முடைய ஆசாபாசங்களால் அடைய முடியாதவனாக்கி விட்டோம்.

ரமணர் அக்ஷரமணிமாலையில் பல விதங்களில் இந்த 'துர்லபனாகிய' பரமனை 'சுலபனா'க்கித் தருகிறார். அவனை மதுர பாவத்தில் காதலனாகக் காண்கிறார். இந்நிலையில் ஊடலும்கூடலும் இணைந்த ரசமான ஒரு பிணைப்பைக் காண்கிறோம். அதுமட்டுமல்ல, உறவாடும் நண்பனாக உரிமை எடுத்துக் கொள்கிறார். பரவச நிலையில் உள்ள பக்தனாகவும் பரிதவிக்கும் பாவியாகவும் அல்லலுறும் சாதகனாகவும் பல்வேறு நிலைகளில் பக்தி, சரணாகதி என்னும் உணர்வுகளைக் காட்டுகிறார். பிற இடங்களில் அறிவுறுத்தும் ஆசானாக, வழிகாட்டும் வேதாந்தியாக, தன்னை வெளிக்காட்டுகிறார். இதுவே இந்த நூலின் பெருமை. பல்வேறு படிகளில் இருந்து பரமனைத் தேடும் ஜீவாத்துமாவிற்கு, அந்தந்த நிலைகளில் அவர்களுக்கு ஏற்ற துணையாக பகவான் இருக்கிறார்.

*கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமும் இரங்கிலை*
*அஞ்சல் என்றே அருள் அருணாசலா*

*(அக்ஷரமணிமாலை, 21)*

*"நான் எல்லா முறையிலும் பிரார்த்தித்து உன்னை வணங்குகிறேன், ஆனால் நீயோ சிறிதும் இரங்காமல் மௌனம் காக்கிறாய். இது உன் வஞ்சத்தனம் அல்லவா. போதும் இந்த விளையாட்டு. 'நீ அஞ்சாதே' என்று அபயம் கொடு" என்று முறையிடுகிறார் பகவான். இந்தக் கருத்தையே ஆதிசங்கரரும் செந்தூர் முருகனை நோக்கி இயற்றிய 'சுப்ரமண்ய புஜங்கம்' என்னும் தோத்திரத்தில் படம் பிடிக்கிறார். 'அந்திம காலத்தில், பேச்சு மூச்சு திணறி உன் நினைவு அழிந்து போகும் நிலையில் உள்ள என்னை உதாசீனப்படுத்தாமல் உன் வாகனமாகிய மயில் மீதேறி வெகு வேகமாக வந்து, "'பயப்படாதே, அச்சம் தவிர்' என்று அபயமளித்து என்னைக் காப்பாற்று" என்ற இந்த வரிகள் நமக்குப் பெரும் தெம்பை அளிக்கின்றன. இறைவன் அளிக்கும் இந்த அபயப் பிரதானமே தமிழில் அழகிய வரிகளில் 'அஞ்சல் என்றே அருள் அருணாசலா' என்ற ரமண வாக்கில் காண்கிறோம்.*


*இறைவன் கருணை அற்றவன் என்பதுபோல முதல் வரியில் ரமணர் 'வஞ்சியாய்க் கொஞ்சமும் இரங்கிலை' என்று ஏன் அமைத்தார்? இதுதான் அவன் துர்லபன் என்று அழைக்கக் காரணமோ? இந்நிலையிலிருந்து விலகி அவனைச் சுலபனாக்க வேண்டுமே, இதற்கு என்ன வழி? பகவான் அதற்கும் உபாயத்தைச் சொல்கிறார். அவன் கருணையைப் பெற அவன் அடியார்கள் கூட்டமே மிகப்பெரிய துணை. அவர்கள் சங்கம் மனதை ஒருமைப்படுத்தி இறைவன்பால் சித்தத்தை வைக்கப் பேருதவியாக அமையும். ஆசாரநியமங்கள் இதற்கு உதவி செய்யாது. இதை அழகுபட 'உள்ளது நாற்பது அநுபந்த'த்தில் ஒரு சிறிய ஆனால் ஆணித்தரமான உதாரணத்துடன்*

பகவான் விளக்குகிறார். இனிய தென்றல் வீசுகிறது. அப்பொழுது யாரும் விசிறியால் விசிறிக்கொண்டு இருக்க மாட்டார்கள். அதேபோல்தான் இந்த வெளி ஆசாரங்களும். சாதுக்கள் சங்கம் இருக்கும்போது அவை தேவையற்றுப் போகின்றன.

*'சாதுக்கள் ஆவார் சகவாசம் நண்ணினால்*
*ஏதுக்காம் இந்நியமம் எல்லாமும்"*

*(உள்ளது நாற்பது அநுபந்தம், 3)*

என்று சத்சங்கத்தின் பெருமையை விளக்குகிறார். இதில் சமகாலத்திற்கு ஏற்ற ஒரு விளக்கமும் உண்டு. நகரவாழ்க்கையின் வேகவளர்ச்சியில் அடுக்குக் கட்டிடங்களில் வாழும் பலருக்கு இயற்கையான காற்றை அநுபவிக்க வாய்ப்பு கிட்டுவதில்லை. ஃபேன், குளிர் சாதன வசதி என்னும் செயற்கை சுகத்தையே நாடி, அதே பழகிப்போய் இயற்கை அன்னையை மறந்து வாழும் இளைய சமுதாயத்திற்கு இந்த உதாரணம் பொருந்தும். அது போல்தான் ஆசார அநுஷ்டானங்களும். நல்லோர் கூட்டம் கிடைக்கப் பெறாத சமயத்தில் அது ஓரளவுக்கு உதவும். ஆனால்



இறைவனை சுலபனாக்கி நம்மிடம் அழைத்துவரும் பணியைச் செய்வது சத்சங்கம் என்னும் உன்னத சாதனமே. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புகூட வழக்கில் இருந்த இந்த ஆன்மீகக் கூட்டு வழிபாட்டு முறை தற்காலத்தில் பலருக்கும் பழங்கதையாக, வழக்கொழிந்து போன செய்கையாக ஆனது நம் துர்பாக்கியம்தான்.

இறைவனை நமக்குச் சுலபனாக்கும் வழிகள் ஒன்றுக்கு மேற்பட்டவை. தியானமும், மனக் கட்டுப்பாடும், வைராக்கியமும், பக்தியும் அவனிடம் நம்மை அழைத்துச் செல்லும் சக்தி படைத்தவை. இதை முண்டகோபநிஷதம் தெளிவாகச் சொல்லும். “பரம்பொருள் பலவீனனால் அடைய முடியாதது. நூலறிவும் பாண்டித்தியமும் அவனிடம் அழைத்துச் செல்லாது. சான்றோன் சரியான உபாயத்தால் அவனை அடைகிறான்.” ஏதை: உபாயை: யததேயஸ்து வித்வான் என்ற இந்த உபநிஷத வரிகள், சரியான உபாயத்தைத் தெரிந்தெடுக்கும் வேலையை நம்மிடம் ஒப்படைக்கின்றன. துர்லபன் போல் காட்சி அளிக்கும் அவன் உண்மையில் எளிவந்த பிரான். அவனை, சிக்கெனப் பிடித்து சுலபனாக்குவது நம் பணியே. அதில் அவன் தோன்றாத்துணையாக இருந்து நம் முயற்சிகளுக்கு நற்பலனை அளிப்பவனாக இருப்பது கண்கூடு. சிறு முயற்சியையும் பெரிதாகக் கருதி எளிதில் திருப்தி அடையும் ‘ஆசுதோஷி’யாக அவன் இருக்கையில் நமக்கு என்ன கவலை.


**ரமணோதயம்**

Voluntary Services

| | |
|---|---|
| K. *சுரேஷ் ஜானகிராமன்* | *9444127770* |
| *ராஜேஷ்* M.S. | *9840075778* |

# கோவணம் தரித்த ஞானக் கோமகன்

கௌதமன்

*ஸ்வாநந்த3பா4வே பரிதுஷ்டிமந்தஹ*
*ஸுஶாந்தஸர்வேந்த்3ரியவ்ருத்திமந்தஹ*
*நாந்தம் ந மத்4யம் ந ப3ஹிஹி ஸ்மரந்தஹ*
*கௌபீநவந்த: க2லு பா4க்3யவந்த. (4)*

*எணமுடல் நிகழ் விகாரம் எவையெனினும் சாட்சியாய்*
*கணமும் மெய்ப் பொருளினையே கருதி உள்ளே நோக்குவன்*
*ஊணும் உள்ளிடம் புறவிடமோ நடுவிடமோ அறியாதான்*
*பணிவுநிறை பாக்யத்தான் கோவணமே அணிந்திருப்பான்.*

*பொருள்: ஆத்ம சந்துஷ்டியிலேயே திளைத்திருக்கும் இத்தகு துறவி வெளியுலக தாக்கத்தினை எங்ஙனம் எதிர் கொள்வான்? அவன் எங்ஙனம் உலகினைக் காண்கிறான் என்ற கேள்விக்கு பகவத்பாதர் இங்கே விடை அளிக்கிறார்.*

*ஸ்வாநந்த3பா4வே பரிதுஷ்டிமந்தஹ அவன் தன்னுள் தானே ஆழ்ந்திருந்து ஆனந்தத்தில் திளைத்திருக்கிறான்.*

*ஒரு ஞானி ஆத்ம சாக்ஷாத்காரம் அடைந்த பின்னர் அவன் ஆனந்த ஸ்வரூபமே ஆகிவிடுகிறான். வெளி உலகத்தில் இருந்து அவனுக்கு ஆனந்தம் அளிக்க எந்த விஷயங்களும் வரத் தேவையில்லை.*

*தனக்குத் துன்பங்களும் தொல்லைகளும் வந்தாலும் ஞானி பரமாத்மாவுடன் இடையறாத் தொடர்பு கொண்டு, அந்தத் தொடர்பின் பேரானந்தத்திலும் பேரமைதியிலும் மூழ்கி இருக்கிறான். எத்தகைய சூழ்நிலையிலும் பேரமைதியில் இருப்பதையே 'சந்துஷ்டி' எனக் குறிப்பிடுகிறோம். இதனையே பகவத் பாதர் ஸுஶாந்த ஸர்வேந்த்3ரிய வ்ருத்தி மந்தஹ எனக் குறிப்பிடுகிறார். இந்திரியங்கள் மூலமாக*

அடையப் பெறும் எந்த ஒரு திருப்தியும் சுகமும் தற்காலிகமானவையே. அதனைத் தொடர்ந்து இதை 'இழந்து விடுவோமோ' என்ற அச்சமும் தொடர்கிறது. ஒன்று மாற்றி ஒன்றாக எழும் சுகங்கள் அத்தனையும் இவ்வாறானவையே. ஆத்மார்த்தமான ஆனந்தமோ இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. ஆத்மாவை முற்றிலும் அறிந்து ஒன்றுவதன் மூலம் அடையப்பெறும் ஆனந்தம் எல்லையற்றது. அஞ்ஞானி சுகத்தை வெளியே தேடுகிறான். கஸ்தூரி மான், தான் நுகரும் சுகந்தம் தன்னுள்ளே இருந்து வருகிறது என்பதை அறியாமல் காடு முழுவதும் தேடி அலைவதுபோல அஞ்ஞானியும் தன்னுள்ளே இருப்பதுதான் பேரானந்தம் என்று அறியாமலேயே வெளியே ஓடி அலைகிறான்.

*சித்த நசித்துச் சிவமயமா நிற்கின்றோன்*
*ஒத்துயிரு ளெல்லா முடனுறைவோன் முத்தனாத்*
*தெள்ளு மவன்சொருப சிந்தனத்தால் விண்டொளிரும்*
*உள்ளிருந் துண்மை யொளி.*

(குருவாசகக் கோவை 1126-ஆம் பாடல்)

பொருள்: தன் சொரூபத்தை இடையறாது ஆன்ம விசாரம் மூலம் தியானிப்பவன் அகத்தே உண்மை ஒளி தனக்குத்தானே ஆனந்த சொரூபமாய் ஒளிரும். பரமாத்மா சிவ சொரூபமாய் எல்லா உயிர்களிலும் இனிது உறைகின்றது. ஞானி அதுவே தானாய் ஒளிர்ந்து உலக உயிர்கள் அனைத்தையும் தன்னில் கண்டு ஆனந்திக்கிறான் (வெளிவிஷயத் தொடர்புகள் அவன் ஆனந்தத்திற்குத் தேவையில்லை).

பகவான் வாழ்வே இந்தப் பாடலுக்கு விரிவுரை ஆகிறது. ஆரம்ப நாட்களில் ஆலயத்திலும் பல வெளி இடங்களிலும் அவர் தன்னில் தானாகவே ஆத்மானந்தத்தில் ஆழ்ந்திருந்தார். பாதாள லிங்க அறையில் அச்சிறுவன் தன்னுள் ஆழ்ந்து அமர்ந்து இருந்தபோது வெளியுலகப் பிரக்ஞையே இல்லாமல்

*ஸ்வாநந்த3பா4வே பரிதுஷ்டிமந்தஹ என்று பிரம்மத்திலேயே லயித்து, வெளி உலகத் தொடர்பே புலன்களுக்கு இல்லாமல் அகம் புறம் எதையுமே அறியாமல் இருந்தார். உடல் கீழ் பாகம் முழுவதும் பூச்சிகளால் அரிக்கப்பட்டு எலிகளால் கடிக்கப்பட்டு தேள் பூரான் போன்ற விஷ ஜந்துக்களால் அரித்து ரத்த விளாறாக ஆகிப் போன பின்னர் எத்தகைய சலனம் உறாது ஆத்மாவிலேயே ஆழ்ந்திருந்தார். குருமூர்த்தத்தில் மாந்தோப்பில் அவர் பல நாட்கள் சாய்ந்த நிலையில் உலக உணர்வின்றி ஆத்மாவிலேயே லயித்து இருந்தபோது அவர் சுவரில் பலநாட்கள் சாய்ந்து இருந்த அடையாளம் இன்றும் மறையாமல் இருந்ததை சுத்தானந்த பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.*

*அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்*
*அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்*
*தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே*

*என்று தேவாரம் கூறுகின்ற நிலையை அடைந்தவர் பகவான். தான் மதுரையை விட்டு நீங்கும் போது எழுதிய மடலில் கூட அவர் தன் பெயரைக் குறிப்பிட வில்லையே!*

*தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் என்பதற்கு இதுவல்லவோ எடுத்துக்காட்டு*

*நாந்தம் ந மத்4யம் ந ப3ஹிஹி ஸ்மரந்தஹ நடு உள் இடம் புற இடமோ நடு இடமோ அறியாதான் என்ற அழகான வரிகளில் பகவத்பாதர், வெளி, உள், நடு என்ற பாகுபாடுகள் எல்லாம் பேத உணர்வு கொண்ட மனத்தால்தான் காணப்படும். ஒரு ஆத்ம யோகியோ, பாகுபாடற்று அனைத்தையும் அகண்டாகார பூரணமாய்க் காண்கிறான்.*

*கரந்த சில் இடந்தோறும் இடம் திகழ் பொருள் தோறும்*
*கரந்து எங்கும் பரந்துள*

என்ற திருவாய்மொழி பாடுவது போல, எல்லா இடத்திலும் அணுவிற்கு அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய் வேறுபாடின்றி அந்தக் கௌபீனதாரி பரந்து உள்ளான் அவனே

*அரியாதியி தரசீவர தகவாரிச குகையில்*
*லறிவாய்ரமி பரமாத்தும வருணாசல ரமணன்*

ஐந்தாம் சுலோகத்தில் பரிவ்ராஜர் பரமஹம்சர் வாழ்க்கையை பகவத்பாதர் மீண்டும் விவரிக்கிறார்

*ப்3ரஹ்மாக்ஷரம் பாவநமுச்சரந்தோ*
*ப்3ரஹ்மாஹமஸ்மீதி விபா4வயந்தஹ*
*பி4க்ஷாஶிநோ தி3க்ஷு பரிப்4ரமந்தஹ*
*கௌபீநவந்த: க2லு பா4க்3யவந்த. (5)*

*கேளப்பா சிவம் ஒன்றே கிளத்துவான் முக்தி மொழி*
*நாளெல்லாம் நான் பிரம்மம் என உன்னும் ஞானத்தான்*
*ஆளியெனத் திருத்திடுவான் அங்கையில் ஊன்ஏற்றிடுவான்*
*கோளில்லாப் பாக்யத்தான் கோவணமே அணிந்திருப்பான்*

இந்தப் பரமாத்ம நிலையில் ஆழ்ந்திருக்கும் துறவி, இந்த ஞானி எப்போதும் தியானத்திலேயே ஆழ்ந்திருக்கிறானா அல்லது மற்றவரைப் போல் உலக வாழ்க்கையை அனுபவிக்கிறானா?

*சங்கரர் கூறுகிறார் ப்3ரஹ்மாக்ஷரம் பாவநமுச்சரந்தோ*

*ப்3ரஹ்மாஹமஸ்மீதி விபா4வயந்தஹ*

இந்த ஞானி தியானத்தில் தன்னை இழந்து இருக்கும் நிலையில் இல்லாமல், சாமானிய உலக வாழ்வில் நடமாடும்போது கூட எப்போதும் இறைவனின் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்த படியே இருக்கிறான். அங்ஙனம் பரமனுடன் இடையறாத தொடர்பில் உள்ளான். உன் நாமம் ஒருபோதும் மறந்து அறியேன் என்று அப்பர் கூறும் நிலையில் தான் இந்தத் துறவியும் எப்போதும் உள்ளான்.

உலக வாழ்க்கையில் உலவி வரும்போதும் அந்த உயர் துறவிக்குத் தேவை ஏதும் இல்லை.

*பி4க்ஷாபுபிநோ தி3க்ஷு பரிப்4ரமந்தஹ*
*கௌபீநவந்த: க2லு பா4க்3யவந்த.*

பகவானின் வாழ்க்கையில் பல்வேறு நிகழ்வுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. நாம் முன்பே கண்டபடி, திருவண்ணாமலை வீதிகளில் பிக்ஷாம்தேஹி என்றுகூடக் கேட்காமல் வீட்டிற்கு முன் கையை மட்டும் தட்டி உடனே அகன்று விடுவார்.

விரித்த கையில் உணவு வந்து விழுந்தால் அந்த ஒரு வாய் உணவை மட்டும் விழுங்கிவிட்டு கையைக் கூட அலம்பாமல் அப்படியே தலையில் துடைத்துக் கொள்வார்.

அவரே தமது நிலையை விவரிக்கின்றார் அல்லவா!

*விதவிதமா நிலைகளெலாம் விசாரஞ் செய்து*
*மிச்சையறு பரமபதம் யாதொன் றுண்டோ*
*வதனையே திடமாக வகத்தாற் பற்றி*
*யனவரத முலகில்விளை யாடு வீரா*
*வெதுசகல விதமான தோற்றங் கட்கு*
*மெதார்த்தமதா யகத்துளதோ வதைய றிந்தா*
*யதனாலப் பார்வையினை யகலா தென்று*
*மாசைபோ லுலகில்விளை யாடு வீரா.*

*(உள்ளது நாற்பது அனுபந்தம், பாடல் 26)*

உலக வாழ்வில் பல்வேறு நிலைகள், பல்வேறு சந்தர்ப்பங்களில் எழும். அதையெல்லாம் விசாரம் செய்து அஞ்ஞானத்தை அழித்தபின் மெய்ப்பொருளாக எந்த ஓர் ஆத்மா நிலைபெற்று ஒளிர்கிறதோ அதையே உள்ளத்தில் உறுதியாய்ப் பற்று. அதை விடாமல், எப்போதும் உள்ளத்தில் இருத்தி, வெளிஉலகில் ஈடுபட்டு இருப்பதுபோல் விளையாடுக என்கிறார் பகவான்.



# சுவாமி ரமணகிரி

## வி.நிரஞ்சன்

*முக்கியமானது, எதை வழிபடுகிறோம் என்பதில்லை, நாம் வழிபடுகிறோம் என்பதே.*

*வழிபடும் நம்மிடத்தே அன்பு இருக்குமானால் நமக்கும் இறைவனுக்கும் இடையே இருக்கும் சுவராகிய நான் என்கின்ற பாவனையை மிக எளிதாக நாம் சமர்ப்பித்துவிடமுடியும்"*

*ரமணகிரி சுவாமிகள்*

பியர் ஏ வெர்டின் என்பவர் சுவீடன் நாட்டின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். இளம் வயதிலேயே அவர் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். இந்திய நாட்டின் ஆன்மீக நூல்களிலும் யோக மார்க்கத்திலும் அவர் பெரிதும் நாட்டம் கொண்டிருந்தார். இந்தியாவிற்கு வந்து குருமார்களிடம் நேராக ஆன்ம தத்துவங்களைக் கற்று யோகப் பயிற்சியில் நிலை நின்று மெய்ப்பொருள் தரிசிக்க ஆவல் மிக்கவராய் இருந்தார். 1945ஆம் ஆண்டு காசி பல்கலைச் சாலையில் இரண்டு ஆண்டுகள் தங்கிப் படிப்பதற்கான உதவி பெற்று இந்தியா வந்துசேர்ந்தார். வகுப்புகளில் நூல்களைக் கற்று அறிவதோடு அவர் மனம் நிறைவு அடையவில்லை. மாறாக அவர் யோக சாதனையில் ஈடுபட்டு நூல்களில் பெரிதும் சிறப்பிக்கப்படுகின்ற மெய்ஞானத்தை அடைவதில் கருத்தாய் இருந்தார்.

ஆதலால் காசியில் குரு ஒருவரை நாடி அடைந்தார். அவரிடம் முறைப்படி சன்னியாசம் வாங்கிக்கொண்டார். இந் நிகழ்ச்சியை ஒட்டி சுவீடனில் அரச குடும்பத்தில் தனது பங்காக இருந்த பெரும் செல்வத்தைத் துறந்தார்; அவர் துறந்த செல்வம் எட்டு மில்லியன் டாலர் ஆகும். அத்தோடு பல்கலைக்கழகப்

படிப்பினையும் கைவிட்டார். அவருடைய தீக்ஷா குரு துறவியாகப் போகிற அவருக்கு நியதி ஒன்றினை விதித்தார். அது அவராக எதையும் யாரிடமும் யாசிக்கக்கூடாது, கிடைப்பதை ஏற்றுக்கொண்டு நிம்மதி அடையவேண்டும் என்பதே.

துறவு மேற்கொண்ட அடுத்த நாள் பியர் முடி மழிக்கப்பட்ட தலையுடனும் காவி உடையுடனும் காசியின் வீதி ஒன்றில் சென்றுகொண்டிருந்தார். அவரை அடையாளம் கண்டுகொள்ளாத அவரது நண்பர் ஒருவர் அவரைப் பிச்சைக்காரன் என்று நினைத்துத் தனது மனைவியிடம் வீட்டிலிருந்த அழுகிய வாழைப் பழங்களைக் கொடுக்கும்படி குரல் கொடுக்கின்றார். அன்று பியருக்குக் கிடைத்த பிச்சை அதுவாக இருந்தது.

அடுத்த நாள் காசி அரசரின் அரண்மனையின் முன்பாக அவர் நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது படை வீரன் ஒருவன் அவரை வணங்கி அரண்மனையின் உள்ளே வரும்படி அழைத்தார். விளக்கம் கேட்ட பியருக்கு வியப்பான பதில் ஒன்று கிடைத்தது. அன்றாடம் காலையில் அரசரின் பார்வையில் அரண்மனை வாயிலுக்கு முன்பாக நடந்து சென்றுகொண்டிருக்கும் முதல் சன்னியாசிக்கு உணவளித்து மரியாதை செய்வது அரசருக்கு வழக்கம் என்பதே.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளையும் தனது குருவினிடம் பியர் விவரித்தார். இரண்டு நிகழ்ச்சிகளையும் சமபாவத்தோடு பொருட்படுத்தாது விட்டுவிடவேண்டும் என்றும், உணவு என்பது உயிர் வாழ்வதன் பொருட்டு என்று கொள்ள வேண்டும் என்றும் அவரது குருவானவர் அவருக்கு அறிவுறுத்தினர். அதன் பின்னர் பியர் யாரிடமும் எதையும் யாசித்ததும் இல்லை, பணத்தைத் தொட்டதும் இல்லை.

இவ்வாறு காசியில் துறவு மேற்கொண்டு மெய்ப்பொருள் நாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பியர் டென்மார்க் நாட்டவரும் பகவானால் பிறவிச் சித்தர் என்று சிறப்பிக்கப் பட்டவரும் ஆன சூன்யதா என்னும் எளியவரைக் காண, இருவரும் நல் இணக்கம் கொண்டனர். கோடைக் காலத்தில் சூன்யதாவின் இமாலயக் குடிலுக்குச் சென்று அங்கேயும் பியர் தனிமையையே நாடி தனது சாதனையில் தீவிரராய் விளங்கினார்.

"உலகத்தாரின் போலி வாழ்க்கை முறை பியரைச் சற்றும் ஈர்க்கவில்லை; அகத்தூய்மை கொண்டு எளியவரினும் எளியவராய் சாதனை ஒன்றையே குறியாகக் கொண்டிருந்தார்," என்று சூன்யதா அவரைப் போற்றுகின்றார்.

பிறவியிலிருந்தே மனோமௌனத்தில் நிலை கொள்ளும் இயல்பினரான சூன்யதா ஏற்கெனவே பகவான் ரமணரைத் தரிசித்து அவரது சன்னிதியில் சூன்ய அனுபூதியில் நிலைத்து அதுவே சீவனின் சொரூப உணர்வும் உண்மையும் என ஒரு அற்புத நிகழ்ச்சியின் வாயிலாகத் தெளிவடைகின்றார்.

குருமார்களை ஒப்பிட விரும்பாத சூன்யதா பகவான் ரமணரைத் தனிப்படப் போற்றுமுகமாக ரமணர் இமாலயம் என்றும், குருமார்கள் என்று தோன்றிக் கொண்டிருக்கும் பலர் சிறு மண் குவியல் என்றும் கூறி இருப்பது நோக்கத் தகுந்தது. ரமணரின் மேன்மையை அறிந்த சூன்யதாவே பியரை பகவான் ரமணரின் சன்னிதிக்கு வழிகாட்டினார்.

ராஜயோகம் பயின்று வந்த பியர் 1949-இல் பகவான் ரமணரைத் தரிசித்தார். அவருடைய சன்னிதியில் ஆன்மவிசாரத்தின்பால் அவர் ஈடுபாடு கொண்டார். ரமண சன்னிதியில் யோகத்தோடு கூடி ஆன்ம விசார

சாதனையில் நிலை கொண்டார். தொடர்ந்து நாற்பது நாட்கள் செய்து வந்த நிலைப்பட்ட சாதனையின் தீவிரத்தாலும் பகவான் சன்னிதித் திருவருளாலும் 1949-ஆம் ஆண்டு சிவராத்திரி அன்று அவருக்குச் சொரூபஞானசமாதி கிட்டியது. மெய்ப்பொருள் ஆன்ம சொரூபமே என்பது உறுதியாயிற்று.

அந் நிகழ்ச்சியை விளக்குமாறு வினவியவர்களிடம் பியர், "அன்று நான் முட்டாள் ஆனேன்," என்று கூறியதோடு நில்லாமல், அன்றிலிருந்து தன்னை ஒரு முட்டாள் என்றே அறிமுகப்படுத்திக் கொள்வாராம்.

அவரது அனுபவத்தின் வாயிலாக அவர் அடைந்த விளக்கத்தை இவ்வாறு குறித்திருக்கின்றார்:

நான் ஏதொன்றையும் அறிவதில்லை
அறிபொருளை அறியும் நான் அறிவில்லாத
முட்டாளே தவிர வேறு இல்லை
எண்ணம் இல்லாத போது
நான் முடிவும் முதலும் இல்லாது இருக்கிறேன்
எது எண்ணுகிறதோ
அதற்குப் பல்லாயிரம் பிறவிகள் உண்டு
நான் இருக்கும் பொழுது அவன் இல்லை
அவன் இருக்கும் பொழுது நான் இல்லை

சசி என்னும் அன்பருக்கு அவர் எழுதியிருக்கின்ற விளக்கக் கடிதத்தைப் படிக்கும்பொழுது, ராஜ யோக மார்க்கத்தில் ஏற்கெனவே தேர்ச்சி பெற்றிருந்த அவர் பகவானின் ஆன்ம விசாரத்தை எளிதாகச் செய்ய வல்லவராயிருந்தார் என்று அறிய முடிகின்றது.

ஒடுக்க வளியை ஒடுங்கும் உளத்தை
　　விடுக்கவே ஓர் வழி உந்தீ பற
　　வீயும் அதன் உரு உந்தீபற
மன உரு மாய மெய் மன்னு மா யோகி
　　தனக்கு ஓர் செயல் இலை உந்தீபற
　　தன் இயல் சார்ந்தனன் உந்தீ பற

*என்னும் உபதேச உந்தியார் பாடலில் பகவான் ஒடுங்கும் உள்ளத்தின் உருவ நாசமே மெய்ஞானப் பேறு என்று விளக்குகின்றனர்.*

*பியரும் ஆன்ம விசாரத்தின் வாயிலாக மனத்தையும் பிராணனையும் உள்ளே அடங்கச் செய்து தற்கவன நிட்டையில் ஆழ்ந்தார்.*

*பகவானின் ஆன்மவிசார மார்க்கத்தைப் பயிலுவதை அவர் தனது தீக்ஷா குருவிடம் தெரிவித்தார். ராஜயோக மார்க்கத்தில் ஈடுபடுவதற்கான தீக்ஷையைப் பெற்ற காரணத்தால் குருவிடம் பகவானது ஆன்மவிசார சாதனையில் தனக்கு ஏற்பட்டிருக்கும் பிடிப்பை விளக்கினார். அதற்கு அவரது தீக்ஷா குரு பகவானே அவரது குரு என்று உறுதிப்படுத்தி அவ்வழியில் சாதனையைத் தொடர்வதற்கு ஊக்குவித்தார்.*

*1950 மார்ச் மாதம் பியர் அல்மோராவில் இருந்த சமயம். பகவான் உடல் விடப்படுகின்ற நேரம் நெருங்குவதை உள்ளுணர்வால் அறிந்து கொண்டார். உடனேயே திருவண்ணாமலைக்கு விரைந்தார். அக் காலகட்டத்தில் எடுக்கப்பட்ட திரைப்படத்தில் பகவானுக்கு இறுதி அஞ்சலி செய்பவர்களுள் ஒருவராக அவர் வந்து செல்வதைப் பார்க்கலாம், உயரமான, ஒல்லியான, நீண்ட முடியோடும் தாடியோடும் கூடிய, வெளி நாட்டவராய் அவரைக் காணலாம்.*

*பகவானின் மகாசமாதிக்குப் பின்னர் பியர் இமாலயத்திற்குச் செல்வதாய் இருந்தார். வழியில் அவர் சென்னையில் தங்கினார். அச் சமயம் நிகழ்ந்த நிகழ்ச்சி அவரைத் தடுத்து ஆட்கொண்டது. இதனை அவர் சூனியதாவிற்கு எழுதிய கடிதத்தில் விரிவாக விளக்கி இருக்கின்றார். வடக்கே செல்லவிருந்த அதே நாளன்று அவர் அடையாற்றில் இருக்கும் பிரமஞான சபையின் நூலகத்திற்குச் சென்று பார்வையிட்டார்.*

ஒட்டியிருந்த பூங்காவில் அவர் உலவிக்கொண்டிருந்த சமயம் பகவான் அவர் முன் தோன்றுகின்றார். தன்னைப் பின் தொடருமாறு சொல்லி முன் நடக்க அவர் பின்னே பியரும் நடக்கத் துவங்குகின்றார். கடற்கரை ஓரமாகவே சென்று ஒரு சிற்றூரை அடைந்து அங்கேயே மணலில் அமர்ந்து விசாரத்தில் ஆழ்ந்தார். அன்றிருந்து அவருடைய ஒரே தர்மம் ஆன்மா தான் என்று பகவான் உபதேசிக்கின்றார். மேலும் சில உபதேசங்களை பகவான் கொடுத்ததாகவும் அவற்றைச் சில நாட்கள் அவர் பின்பற்றியதாகவும் அவர் அக்கடிதத்தில் தெரிவிக்கின்றார். அக் கிராமத்து மக்களே அவருக்கு ஒரு குடிலை அமைத்துத் தந்ததாக அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

ஆனால் வேறு ஒரு விதமாகவும் அந் நிகழ்ச்சி விளக்கப்படுகின்றது. ஸ்வீடன் நாட்டு அரச குடும்பத்தினர் என்பதால் சென்னையில் அவருக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பவர் ஒருவர் அமைந்து இருந்தார். கடற்கரையிலேயே விசாரத்தில் ஆழ்ந்துவிட்டிருந்த பியர் நெடு நேரம் திரும்பாததினால் அவர் எங்கு சென்றுவிட்டார் என்று தெரியாமல் அவர் மிகவும் கவலை கொண்டார். இவரைத் தேடும் பணி துவங்கியது. இறுதியில் கடற்கரையில் கொளுத்துகின்ற வெய்யிலில் அவர் நிட்டையில் ஆழ்ந்திருந்ததைக் கண்டனர். அவர் புற உணர்விற்கு மீண்ட பின்னர் அவரைப் பார்த்துக் கொள்பவர் தனது இருப்பிடத்திற்கு வருமாறு அவரை வேண்டினார். ஆனால் பியரோ அவ்விடத்திலேயே தங்குமாறு பகவான் தன்னைப் பணித்திருப்பதாகவும் ஆதலால் அங்கேயே இருக்கப் போவதாகவும் உறுதியாய்த் தெரிவிக்கின்றார். வேறு வழியின்றி விருந்து பேணுபவர் தென்னை ஓலைகளைக் கொண்டு வேய்ந்த ஒரு குடிலை அவ்விடத்திலேயே அமைத்துக் கொடுத்தார். தினந்தோறும் பியருக்கு உணவு கொண்டுசென்று அளிப்பதற்கும் ஏற்பாடு செய்தார்.

திருவான்மியூரை ஒட்டிய இடம் இது. இங்கே பியர் ஆழ்ந்த நிட்டையில் ஊன்றியிருந்தார். உடலின் தேவைகளை மறந்த வண்ணம் இருந்தார். தனக்கு அனுப்பப்பட்ட உணவை அக் கிராமத்து மீனவர்களிடம் கொடுத்துவிடுவார்.

இங்கு ஒரு வியக்கத்தக்க நிகழ்ச்சி நிகழ்ந்தது. வழக்கறிஞராக இருந்து பகவானின் பக்தராய் பகவானின் சன்னிதியில் நிட்டை கைவரப்பெற்று பகவானையே குருவெனக் கொண்டு உய்ந்தவர் சுவாமி சுரேஷானந்தா அவர்கள். பாலக்காட்டில் அவருடைய பெருமளவு பொருட் கொடையாலும் முயற்சியாலும் விஞ்ஞான ரமணீய ஆஸ்ரமம் நிறுவப்பட்டது. பகவானுடைய ஆசியால் வறியவர்களுக்கு அன்னதானம் துவங்கப்பட்டது. சுவாமி சுரேஷானந்தா பியரோடு கூடி அக் கடற்கரையில் அக் கால கட்டத்தில் இருக்க நேர்ந்தது. இருவரும் தபசிகளாக இணைந்து இருந்தனர். அன்று பார்த்து அவர்களுக்குப் பசியும் தாகமும் கூடியது. உணவும் வந்து சேரவில்லை என்று தெரிகின்றது. அச் சமயம் பெண்மணி ஒருவர் அவர்களுக்கான உணவைக் கொண்டு வருகின்றார்.

அவர் அமெரிக்காவைச் சேர்ந்த பெண்மணி. இவர்களுக்கு அவரைத் தெரியாது, அவருக்கு இவர்களைத் தெரியாது. அவர் எப்படி இங்கு வந்து சேர்ந்தார் என்பது இவர்களுக்கு வியப்பாயிற்று. பகவான் ரமணர் தனக்குத் தோன்றி இவ் இரு தபசிகளுக்கும் உணவளிக்குமாறு பணித்ததாக அவர் தெரிவிக்கின்றார்.

அவர்தான் எலினார் பாலின் நோயி என்பார். 1930-களில் கலிஃபோர்னியாவிலிருந்து ரயில் வழியாக அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைக்கு வந்து பின்னர் கப்பலில் பயணித்து சென்னை வந்து சேர்ந்து, அங்கிருந்து கொடைக்கானல் வந்து அங்கே திருவருளால் பகவானிருக்கும் இடத்திற்கு

*வழிகாட்டப்பட்டவர். அமெரிக்காவில் இருந்த சமயம் பல மாதங்கள் உறக்கத்தை முற்றிலும் இழந்து மன நலம் குன்றி உடல் நலிந்து போனார் எலினார். இந்தியாவிற்குச் சென்றால் ஓர் அருளாளர் சன்னிதியில் தனக்கு விடிகாலம் இருக்கலாம் என்கின்ற நம்பிக்கை அவரிடம் மேலோங்கிற்று. அதனால் உந்தப்பட்டு தனியாகவே கப்பலில் பயணம் ஆனார். அப்பொழுது அவருடைய மன உடல் நிலை கவலைக்கு இடமாக இருந்ததால் கப்பலின் மருத்துவர் அவரைப் பயணியாகச் சேர்த்துக் கொள்ள அஞ்சினார். இவருடைய மன உறுதியையும் உருக்கமான வேண்டுகோளையும் கண்டு இரங்கினார். இருந்தும் கப்பலின் தலைவருக்கு எலினாரின் நிலை தெரிந்தால் அவர் எலினாரைக் கப்பலுக்குள் அனுமதிக்கமாட்டார் என்று அவருக்குத் தெரியும். ஆதலால் எலினார் கப்பலின் தலைவருக்குத் தெரியாமலே கப்பலுக்குள் சென்று பயணத்தைத் தொடர்ந்தார்.*

*இளம் வயதினர், அமெரிக்கப் பெண்மணி, தனிமையில் பயணம் செய்கின்றவர், அவருக்குத் தெரிந்தவர்கள் யாரும் இந்தியாவில் இல்லை. இந் நிலையில் சென்னை வந்து கொடைக்கானலுக்கு அனுப்பப் படுகின்றார். அங்கே தங்கியிருந்த விடுதியிலிருந்து வெளி வந்து முதன் முதலாகப் பார்த்த இரு இளைஞர்களிடம் அருளாளர்கள் யாரையாவது அவர்களுக்குத் தெரியுமா என வினவ அவர்களால் பகவான் ரமணர்பால் வழிகாட்டப்பட்டார். அவர் தங்கி இருந்த விடுதியில் இருந்த அயல் நாட்டினர் திருவண்ணாமலை காடுகள் நிறைந்த பகுதி என்றும் தனியாக ஒரு பெண் அங்கே செல்வது ஆபத்து என்றும் அச்சுறுத்துகின்றனர். ஆனால் அவரோ பகவானை அடைந்துவிடுவது என்பதில் உறுதியாய் இருந்தார். போகும் வழியில் மதுரைக்குச் சென்று கோயிலைப் பார்த்துவிட்டுப் பின் செல்லும்படியும்*

*இருந்தவர் கூறினர். அவரோ கண நேரமும் தாமதியாது அண்ணாமலையையும் பகவானையும் அடைய உறுதி பூண்டார்.*

*அடைந்த மாலையில் பகவானைக் கண்ட மாத்திரத்தில் தன் விடியல் பகவானே என உணர்ந்து சஞ்சலம் தீர்ந்தார். அன்று இரவு பயணியர் விடுதியில் வசதி ஏதும் இல்லாத அறையில் பழைய மரக்கட்டிலில் படுத்தவர் இரவு பூராவும் காலை நெடு நேரமும் தன்னை மறந்து துயிலில் ஆழ்ந்து சுகித்து எழுந்தார். என்னே குருவருள்! உடல் நலிந்தும் மனம் நலிந்தும் புறத்தடைகள் பல அச்சுறுத்திய போதிலும் உறுதி தளராது அவற்றை எல்லாம் கடந்து குருவைச் சரணாக அடைந்த அப் பெண்மணியின் விசுவாசம் என்னே!*

*சில நாட்களே தங்கவேண்டும் என்று வந்த அவர் எட்டு மாதங்கள் பகவானிடத்தே தங்கிவிட்டார். அமெரிக்காவிற்கே செல்ல மனம் இல்லாது பிரிவதற்கு முதல் நாள் கண்ணீரை மழை எனப் பொழியவிட்டு பிரிவின் துயரம் பொறாது பகவானிடமிருந்து பிரியாவிடை பெற்றுக் கொண்டார், அவர் தான் பகவானது மகாசமாதியை ஒட்டிய காலத்தில் பகவானை மீண்டும் தரிசிக்க வந்திருக்கின்றார். அச் சமயத்திலேயே சென்னையில் இருக்கையில் பகவானால் பணிக்கப்பட்டு கடற்கரையில் இருந்த தபசிகளுக்கு விருந்து எடுத்துச் சென்றிருக்கின்றார்.*

*பகவானின் உபதேசத்தைப் பின்பற்றி ஒழுகி வந்தார் பியர். ஓர் இரவு 12 மணியிலிருந்து 2 மணிக்கு உட்பட்ட நேரத்தில் குண்டலினி எழும்பி சகஸ்ராரத்தினை அடைந்து பின்னர் சீவன் ஆன்மாவோடு கரைந்து ஒன்றிய அனுபூதியை பியர் அடைந்தார், கடல் அலைகளின் ஓம் என்னும் ஒலியால் அவர் உடல் உணர்வு மீண்டும் வரப் பெற்றதாகவும் இல்லை எனில் உடலை அவர் விட்டிருப்பார் என்றும் சூன்யதாவிற்கு*

எழுதிய கடிதத்தில் அவ் அனுபூதி பற்றி விளக்கி இருக்கின்றர். அந் நிலையில் திரும்பி வருவதற்கோ ஏதாவது முயற்சி செய்வதற்கோ ஆள் ஒருவனும் இல்லை என்று விளக்குகின்றார்.

உடல் உணர்விற்கு மீண்ட அவர் பகவான் பூங்காவில் தோன்றியதற்கு முன் நிகழ்ந்த யாவையும் நினைவிற்கு வராது மறைந்தன என்கின்றார். நாட்கள் செல்லச் செல்ல சற்றே நினைவுகள் திரும்புவதாகவும் அந் நினைவுகளும் ஆன்மீக அனுபவங்களையும் ஆழ்ந்த அன்பையும் மையமாகக் கொண்டவை மட்டும் தான் என்றும் குறிப்பிடும் அவர் அதனால்தான் சூன்யதாவினை நினைக்க முடிந்து அக் கடிதத்தினை அவருக்கு எழுதுவதாகவும் குறிப்பிடுகின்றார்.

குறுகிய காலமே சென்னை கடற்கரையினில் அவர் தங்கி இருந்தார். பகவான் மீண்டும் அவர் முன் தோன்றி அவரை மதுரைக்குச் செல்லுமாறு பணித்தார். மதுரையை அடுத்த கிராமப் புறங்களில் அவர் அங்குமிங்கும் சென்று கொண்டிருந்த பொழுது பகவான் மீண்டும் காட்சி அளித்து சிறுமலைக் குன்றுகள் நிறைந்த பகுதிக்குச் சென்று அங்கே தங்குமாறு வழிகாட்டினார். வாடிப்பட்டிக்கு அருகில் உள்ள குட்லாடம்பட்டி என்னும் கிராமத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் சிறுமலைச் சாரலில் ஒரு சிறிய மலை அருவியை ஒட்டிய இடத்தில் பியர் தங்கலானர். மதுரையைச் சேர்ந்த ஓர் அன்பர் அவருக்கான அனைத்து உதவியும் செய்துகொடுத்தார். எளிமையிலும் எளிமையான வாழ்வு தொடர்ந்தது. ஒரு சிறு கூண்டு போன்ற அமைப்பில் அவரது இரவு கழிந்தது. எளிமையான உணவை அவரே சமைத்துக் கொண்டார். பெரும்பாலும் மலையின் மேல் ஏறி தனிமையில் நிட்டையில் ஆழ்ந்துவிடுவார். 1950-களில் முற்றிலும் மனித நடமாட்டமே இல்லாத மலைப் பகுதி. சுவீடன்

நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்; வசதிகளைத் துறந்து, செல்வத்தைத் துறந்து, உறவினர்களைத் துறந்து, தனது நாட்டையும் துறந்து, மனித உறவையும் துறந்து, உடலின் தேவைகளையும் துறந்து "ஆன்மாவே உனது தருமம்" என்னும் பகவான் ரமணரது உபதேசத்தை மட்டுமே தலையாயது என்று பற்றி சொரூப நிட்டையில் ஆழ்ந்து இன்பக் கடலாகிய ஆன்மாவில் மருவினார்.

தனது ஆனந்த அனுபவத்தை அவர் இவ்வாறு பாடுகின்றார்:

**இரவு பூராவும் அக்கினி ஒளி ஆனந்தம் பிரணவம்**
**தந்தையே! தந்தையே ! என்ன சுகம் !**
**எண்ணமே இல்லை, ஆனந்தமும் ஆனந்தியும் தான்**


தந்தையே! நீங்கள் என்னை அணைத்துக் கொண்ட பொழுது என்னையே முற்றிலும் இழந்துவிடும் நிலைக்கு எவ்வளவு நெருங்கிவிட்டேன்

தந்தையே! என்னை ஏன் எண்ணங்களால் துயர் உறுகின்ற, அகந்தையால் வதைபடுகின்ற இடமாகிய மனம் செயல்படும் நிலைக்குத் திருப்புகின்றீர்களோ?

நிட்டையில் ஊன்றி உடலை மறந்த காரணத்தால் பியர் சிறிது காலத்திலேயே காச நோய்க்கு இலக்கானார். அப்பொழுதும் கூட உடலைப் பற்றிய சிந்தனை இல்லாமலே இருந்தார். இருந்தும் அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி காச நோயாளிகளுக்கு அமைந்திருந்த மருத்துவ நிலையத்தில் இறுதி நாட்களைக் கழித்தார். உடல் முற்றிலும் சீர் குலைந்திருந்தது. ஆனால் உற்சாகம் மிகுந்தவராய்த் தான் இருந்தார். "உடலே துன்புறுகின்றது. நான் நன்றாகத்தான் இருக்கின்றேன். எப்பொழுதையும் விட சக்தி இப்பொழுது மிகுந்த வல்லமையோடு விளங்குகிறது, இதோ இங்கே புருவ மத்தியில்," என்று சொல்லியிருக்கின்றார்.

தனது இறுதியை முன் கூட்டிக் குறிப்பால் உணர்த்திய அவர், "இன்று நான் நல்ல மாம்பழம் ஒன்றைச் சாப்பிடப் போகின்றேன். நாளை அது குப்பை ஆகிவிடும்," என்று கூறி இருக்கின்றார். அடுத்த நாள் சீவன் அடங்க ஒரு மணி நேரத்திற்கும் முன்பிருந்தே அவர் ஆழ்ந்த நிட்டையில் உள்முகப்பட்டு இருந்தார். இறுதிக் கணத்தில் "நாம் செல்லலாம்" என்று அவர் முணுமுணுத்தார். யோகியரைப் போலவே அவரும் உடலைக் களைந்தார். அவரது சிரசின் உச்சியில் ரத்தம் கசிந்திருந்தது.

அவர் தங்கியிருந்த சிறுமலைச் சாரலில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. சிவ லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பியர் வெர்டின் சுவாமி ரமணகிரியாக அந்த ஆலயத்தில் குடிகொண்டு விளங்குகின்றார்.



*பியருக்கு அவரது காசி தீக்ஷா குரு கொடுத்த பெயர் சுவாமி ஹனுமான் என்பது. பகவானை வந்தடைந்த பிறகு அவர் ரமணகிரி என்றே அறிமுகமாகிறார். அவருக்கு ரமணகிரி என்கின்ற பெயர் பகவான் ரமணரால் கொடுக்கப்பட்டது என்கிறார் சூன்யதா.*

*ஒன்று மட்டும் நிச்சயம். பியர் பகவானின் அருளுக்குப் பூரணமாய்ப் பாத்திரரானார். இதற்கு ஒரு சிறிய எடுத்துக் காட்டு: குட்லாடம்பட்டியில் உள்ள சுவாமி ரமணகிரி ஆலயத்தில் பகவான் ரமணரே தனது அருட்கைகளால் ஆக்கிக் கொடுத்திருக்கும் தேங்காயின் ஓட்டினால் அமைந்த திருவோடு. இதன் தனித்துவம் என்ன என்றால் தேங்காயை நீளவாக்கில் அரிந்து அதில் ஒரு பகுதியை அவ்வளவு நேர்த்தியாக பகவான் திருவோடாக அமைத்து சுவாமி ரமணகிரிக்கு அளித்திருக்கின்றார். பகவான் ரமணருக்கும் சுவாமி ரமணகிரிக்கும் இடையில் புறமுகத்தும் அகமுகத்தும் நிலவிய உறவின் மேன்மையை நாம் முழுவதும் அறிவதற்கில்லை. நம் சிற்றறிவிற்கு எட்டாத அவ்வுறவின் மேன்மையை உன்னிஉன்னி உய்வோமாக!*

# இனிவரும் திருநாட்கள்

## 2018

| | | | |
|---|---|---|---|
| *நவம்பர்* | 6 | *செவ்வாய்* | *தீபாவளி* |
| | 14 | *புதன்* | *கார்த்திகை தீபவிழா தொடக்கம்* |
| | 23 | *வெள்ளி* | *கார்த்திகை தீபம்* |
| *டிசம்பர்* | 24 | *திங்கள்* | *ஸ்ரீபகவானது ஜயந்தி* |

## 2019

| | | | |
|---|---|---|---|
| *ஜனவரி* | 15 | *செவ்வாய்* | *பொங்கல் திருநாள்* |
| | 20 | *ஞாயிறு* | *சின்ன ஸ்வாமிகள் ஆராதனை* |
| *பிப்ரவரி* | 23 | *சனி* | *சுந்தரம் ஐயர் தினம்* |
| *மார்ச்* | 4 | *திங்கள்* | *மஹா சிவராத்திரி* |
| | 15 | *வெள்ளி* | *ஸ்ரீ வித்யா ஹோமம்* |

# ரமண மையங்களை நோக்கி
# தொடர் கட்டுரை - திண்டுக்கல்

### *1) ஸ்ரீ ரமண சத்சங்கம், திண்டுக்கல்*

*பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் அன்பர்கள் உலகெங்கும் பல்வேறு இடங்களிலும் மாதத்தில் ஒருமுறையோ அல்ல வாரத்தில் ஒருமுறையாவது ஒன்றுகூடி பகவான் அருளிய பாடல்கள் அல்லது பகவானின் அன்பர்கள் பகவான் மீது இயற்றப்பட்ட பாடல்களை ஒன்றிணைந்து பாராயணம் செய்து வருவதை நாளுக்கு நாள் விரிவடைந்து வருவது நாம் அறிந்ததே. குடும்பம், தொழில், பொருளாதார நெருக்கடி என்று மக்கள் கால ஓட்டத்திற்கு ஈடாக ஓடிக்கொண்டிருக்கும் இந்த வேளையிலும் இது போன்ற சத்சங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது தங்களுக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது என்பதை அவர்கள் கண்களில் நீர் மல்க, தழுதழுத்த குரலில் நெக்குருகிக் கூறும்போது அதைக் கேட்பவர்கள் கண்களிலும் நீர் வருவது இயல்பு. தற்போதைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் சக மனிதரைத் தொடர்பு கொள்வது என்பது மிக எளிதான காரியமாகிவிட்டது. இதன் மூலம் மக்களை ஒன்றிணைத்து ஒரு கூட்டு பாராயணம் நடத்துவது மிகவும் எளிதே. ஆனால் எந்தவித விளம்பரமில்லாமல் சிறிய அளவிலே சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்ட ஒரு சத்சங்கமானது இன்று விருட்சம்போல் வளர்ந்தேறி வந்திருப்பது பகவானின் பூரண அனுக்கிரக்கித்தினால் தான் மட்டுமே என்று கூறினால் மிகையாகாது.*

*பகவான் 1892-ஆம் ஆண்டு மதுரைக்கு வருவதற்கு முன்னர் ஓராண்டு (1891) திண்டுக்கல் நகரில் தன்னுடைய உறவினர் இல்லத்தில் தங்கி கல்வி பயின்று வந்தார் என்பது அவருடைய வாழ்க்கைக்*

குறிப்பேடுகளில் நாம் காணலாம். பகவானின் திருப்பாதம் பட்ட அந்தப் புண்ணிய நகரில் திண்டுக்கல் ரயில் நிலையம் அருகில் கதவு எண் 25, நாகல் நகரில் அமைந்துள்ள நா.சு.நா. சுப்பையர் தர்ம சத்திரத்தில் 2009-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் கூட்டு வழிபாடானது ஒவ்வொரு தமிழ் மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பகவானை முருகக் கடவுளின் அவதாரமாகவே பார்க்கின்ற காரணத்தினால் இந்த அன்பர்கள் இந்த நாளைத் தேர்ந்தெடுத்ததிற்கான காரணமாகக் கூறுகின்றனர். பகவானின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவரான மணவாசி ராமசாமி அய்யரோ பகவானின் மேல் இயற்றிய பல்வேறு பாடல்களில் ஒன்றில் “முருகனே அருணையில் ரமணனாய் வந்து அருளினார்...” என்று பாடியிருப்பது நாம் அறிந்ததே. மேலும் மணவாசி ராமசாமி அய்யரின் மகள் ராஜம்மாள் அவர்கள் பகவான் முருகப் பெருமானாகவே எண்ணி அவர் மயில் மேல் அமர்ந்திருப்பதைப் போல் ஒரு படம் வரைந்துள்ளார். அப்படத்தை ஆஸ்ரமத்தின் பழைய பாகசாலையில் இன்றும் நாம் காணலாம்.



இந்தக் கூட்டு வழிபாடானது தொடங்குவதற்கு மூன்று ரமண அன்பர்கள் காரணமாயிருந்திருக்கின்றனர் அவர்கள் திரு. ராமதாஸ், திரு.பாலபாரதி (பகவானின் பல்வேறு முகநூல் பக்கங்களில் இருக்கும் ஆன்மிக அன்பர்களுக்கு இவர் நன்கு பரிச்சியம். திரு.ரமண பாரதி தமிழன் என்னும் பெயரில் முழுவீச்சில் முகநூலில் இயங்கிக் கொண்டிருக்கிறார்), திரு.ஸ்ரீதர் (திரு.ராமதாஸ் அவர்களின் புதல்வர்) மற்றும் திரு.ஆறுமுகம். இந்த சத்சங்கமானது சிறிய ஊற்று போலத் தொடங்கப்பட்டு இன்று ஒரு ஜீவநதியாகப் பிரவாகம் எடுத்து பயணம் செய்வதற்குப் பல அன்பர்கள் உறுதுணையாக இருக்கின்றனர். அதில் திரு. பழ.முத்தையா, திரு. சுப்ரமணியம் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். 2009-ஆம் ஆண்டு




தொடங்கப்பட்ட இந்தக் கூட்டு வழிபாடானது தொடர்ந்து 118 தமிழ் மாத கார்த்திகை நக்ஷத்திர நாட்கள் எந்தவித தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற்று

வருகிறது. ஒவ்வொரு மாத கார்த்திகை கூட்டுவழிபாட்டிற்கும் திண்டுக்கல் நகரின் பல்வேறு இடங்களிலிருந்து சிறு குழந்தைகள் முதல் பெரியவர் வரை வந்து அருணாசல அக்ஷரமணமாலையையும், சாது ஓம் சுவாமிகள் அருளிய தியானப் பாட்டினையும் பாராயணம் செய்து ரமணானந்தத்தில் திளைக்கின்றனர். பகவானின் பால்ய காலத்தில் நடைபெற்ற சம்பவங்களுடன் கூட்டுவழிபாட்டிற்கு வருகின்ற அன்பர்களின் வாழ்வில் பகவானின் கருணையினால் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் 20 நிமிட சொற்பொழிவாகவே நிகழ்த்துகின்றனர்.

தீபாராதனை முடிந்த பின்னர் சத்சங்கத்தில் கலந்து கொண்ட அனைத்து அன்பர்களுக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது. சுமார் 1000 அன்பர்களுக்கும் மேல் பகவானின் பிரசாதத்தை பேருவுகையுடன் உண்டு மகிழ்கின்றனர். இந்த அன்னதானத்திற்குத் தேவையான காய்கறிகளை அன்பர்களே வழங்குகின்றனர். அன்னதானம் முடிந்த பிறகு நிறைந்தது தங்களுடைய வயிறு மட்டுமல்ல தங்களுடைய மனதும் தான் என்று கூறி பகவானின் படத்தை நமஸ்கரித்து செல்கின்றனர்.



ஒவ்வொரு மாதமும் இந்த சத்சங்கம் நடைபெறுவதற்கு பணம் ஏதும் வாங்காமல் தங்களுடைய சத்திரத்தைப் பயன்படுத்துவதற்கு அதனுடைய நிர்வாகித்தினர் அனுமதி தந்தருளிகின்றனர். இந்தக் கூட்டு வழிபாடானது தங்கள் சத்திரத்தில் நடைபெறுவது மிகவும் புண்ணியமாகவே கருதுகின்றனர்.

அங்கு அன்னதானம் முடிந்த பின் சுமார் 1000 நபர்களுக்கு மேல் சாப்பிட்டு விட்டுச் சென்றதற்கான சுவடு ஏதும் இல்லாமலே காட்சி அளிக்கிறது. இதுவே தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ள அன்பர்களின் பணியை போற்றுவதற்கு ஒரு நற்சான்று. காய்கறி நறுக்குவதிலும், சமையல் பணியில் ஈடுபடுபவர்களும், இலை அடுக்கிவைப்பவர்களும் தங்களுக்கு ஒதுக்கப் பட்ட செயல்களைச் செம்மையாகவே செய்து முடிக்கின்றனர். தங்களுக்கு பகவானே அளித்தது இந்தப் புனித கைங்கர்யச் செயல் என்றே கூறிக்கொண்டே தங்களுடைய வேலையைக் கவனிக்கத் தொடங்குகின்றனர்.

இவர்கள் மறந்தாலும் அடுத்த மாத கார்த்திகை நாளை இங்கு சத்சங்கத்திற்கு வரும் மக்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சாலைகளில் இந்த சத்சங்க உறுப்பினர்களைக் காணும் இவர்களுக்கே நினைவுப்படுத்துகின்றனர். திண்டுக்கல் நகர மக்களின் இல்லத்தில் இருக்கும் மாத காலண்டர்களில் இனி பௌர்ணமி, அமாவாசை, பிரதோஷம்போல கார்த்திகை மாத ரமண சத்சங்கத் திருநாளை குறித்து வைத்துக் கொள்ளும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை என்றே தோன்றுகிறது. எல்லாம் பகவான் சித்தம்.

★ ★ ★

## 2) ஸ்ரீ ரமணாசலம் (விழிப்பு நகரம்), திண்டுக்கல்

இதே புண்ணிய திண்டுக்கல் நகரில் பத்மகிரி மலையடிவாரத்தில் கிரிவலப் பாதையில் ஓதசுவாமிகளின் சமாதி வளாகத்திற்கு அருகே பகவான் 1891-ஆம் ஆண்டு தம் வயது பாலகர்களுடன் விளையாடிய இடத்தில் ஒரு பகுதியில் சில ரமண அன்பர்கள் 'ஸ்ரீ ரமணாசலம்' என்னும் ஒரு அமைப்பு ஏற்படுத்தி 2007-ஆம் ஆண்டு முதல் அன்பர்களின் இல்லம் மற்றும் திண்டுக்கல் நகரில் உள்ள திருக்கோவில்களில் சத்சங்கம் நடத்தி வந்துள்ளனர். பின்னர் அதே வருடத்தில் இந்த ரமணாசலம் என்னும் புண்ணிய இடத்தில் பகவானின் பூரண அனுக்கிரகத்தாலும் அன்பர்களின் சீரிய முயற்சியாலும் தங்கு தடையின்றி ஒவ்வொரு வாரம் ஞாயிறன்று மாலையில் சத்சங்கம் நடத்தி வருகின்றனர்.

நாகல் நகர் சுப்பையர் தர்ம சத்திரத்தில் தமிழ் மாத கார்த்திகை நட்சத்திரத்தில் ரமண சத்சங்கம் நடத்தி



வருவதைப் போலவே 2010-ஆம் ஆண்டு முதல் பகவான் அவதரித்த புண்ணிய புனர்வசு நன்னாளில் மதிய வேளையில் அருணாசல அக்ஷரமணமாலை, புனர்வசு வண்ணம், அப்பளப் பாட்டு, ஆன்ம வித்தை கீர்த்தனை, திருவண்ணாமலை தேவாரம், சாது ஓம் சுவாமிகள் இயற்றிய பாடல்கள், திருப்புகழ் பாடல்கள் ஆகியவற்றை அன்பர்கள் பாராயணம் செய்து வந்து கொண்டிருக்கின்றனர்.

பின்னர் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப் படுகிறது. மலையடிவாரத்தில் இயற்கை எழில் கொஞ்சும் காட்சி பாராயணத்துடன் பறவைகள் கீச்சொலி, குரங்குகளின் அட்டகாசம், ஆட்டுக் கூட்டத்தின் சத்தமும் இடை இடையில் ரீங்காரமிடுகிறது.



இந்த ரமணாசலமானது முன்னர் கதவு, ஜன்னல் கூட இல்லாமல் ஒரு சிறிய கூற்றுக் கொட்டகையில் நான்கு

வருட காலம் இருந்துள்ளது. பகவானை எந்நேரமும் அன்பர்கள் வந்து தரிசனம் செய்யும் பொருட்டு இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளனர். பின்னர் காவல் துறையின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்க ஒரு கதவு மட்டும் பொருத்தி இரவு மட்டும் அடைத்துச் செல்கின்றனர்.

ஸ்ரீ ரமணாசலத்தில் ஒவ்வொரு அன்பர்களும் தாமே முன் வந்து அன்னதானத்திற்கு இலை நறுக்குவதும், பூ தொடுப்பதும், சுத்தம் செய்வதும் என்று தங்களை முழுவதுமாக ரமணாலய பணியில் இணைத்துக்கொள்கின்றனர்.

பகவானின் பேரைப் பயன்படுத்தி யாரிடமும் இங்குப் பணம் வசூலிப்பது இல்லை. அன்பர்களே தங்களுடைய பெயரை எங்கும் பயன்படுத்தாமல் தங்களை முழுவதுமாக இந்தப் புனித கைங்கர்யத்தில் ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

தற்போது மராமத்துப் பணிகள் நடந்து வருகின்றன. அனைத்தும் பகவானின் பரிபூரண அனுக்கிரகத்தினால் நிறைந்த பின்பு மூன்று நாட்கள் ஸ்ரீ ரமணசந்நிதி முறை முற்றோதல் நடத்த வேண்டும் என்பதே இங்குள்ள அன்பர்களின் நெடுநாள் கனவு என்றும் அதுவும் பகவானின் சித்தம் என்றே கூற வேண்டும். தற்போது ஒவ்வொரு மாத பௌர்ணமிக்கும் பத்ம கிரியை வலம் வரும் அன்பர்களுக்கும் இங்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2018

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 23 | செவ்வாய் | இரவு 10.45 | 24 | புதன் | இரவு 10.50 |
| நவம்பர் | 22 | வியாழன் | பகல் 12.45 | 23 | வெள்ளி | பகல் 12.02 |
| டிசம்பர் | 22 | சனி | காலை 10.45 | 23 | ஞாயிறு | காலை 8.30 |

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### முருகனார் ஆராதனை

*பகவானைத் தவிர புறந்தெய்வம் தொழாப் பக்தரான முகவைக்கண்ண முருகனாரின் ஆராதனை ஒவ்வொரு வருடமும் அவர் சமாதியடைந்த ஆவணி அமாவாசை தினத்தன்று ஆச்ரமத்தில் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டும் 9-9-2018 ஞாயிற்றுக்கிழமை ஆவணி அமாவாசை தினத்தன்று அன்னாரது 45-ஆவது ஆராதனை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் வெகுசிறப்பாக அனுசரிக்கப்பட்டது. அன்னாரது சமாதிக்கு அபிஷேக அலங்காரங்கள் சிறப்பாக நடைபெற்றன. முருகனார் இயற்றிய ஸ்ரீ ரமண சரித அகவல், ஸ்ரீ ரமண சந்நிதிமுறை முற்றோதல் ரமண அன்பர்களால் பாராயணம் செய்யப்பட்டது. மயிலை கபாலீஸ்வரர் கோயில் ஓதுவார் 'திருவாசக செந்நாவலர்' சத்குருநாதர் அவர்களின் 'சந்நிதிமுறை' பண்ணிசைப் பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.*

### அருணை விஜய தினம்

*1896-ஆம் வருடம் - 122 வருடங்களுக்கு முன்பு - செப்டம்பர் முதல் நாள், இளந் துறவியாக, வேங்கடராமன் திருவண்ணாமலைக்கு வந்தடைந்தார். ஆகஸ்ட் 29-ஆம் தேதி மதுரையில் துவங்கிய அவரது பயணம் - இரயில் பயணம், மௌல்வியைச் சந்தித்தல், பத்து மைல் நடைபயணம், பயணச் செலவுக்காகக் காதுக் கடுக்கனை வைத்துப் பணம் பெறுதல் போன்ற - பல சோதனைகளுக்குப் பிறகு, ஞானத் தந்தையாம் அருணாசலேசனை செப்டம்பர் முதல் நாள் வந்தடைந்ததும் முடிவுற்றது. அதன்பின் தனது தேகவுடலை நீக்கும்வரை அவர் அருணாசலத்தை விட்டு நீங்கியதே இல்லை.*

*அருணாசலம் தம்மை எவ்வாறு கவர்ந்திழுத்தது என்று அருணாசல அக்ஷரமணமாலையில் பகவான் இவ்வாறு குறிப்பிடுகிறார்:*

*பெயர்நினைத் திடவே பிடித்திழுத் தனைஉன்*
*பெருமையார் அறிவார் அருணாசலா*

*(அக்ஷரமணமாலை, 70)*

*பொருள்: அருணாசலமென்று உன் பெயரை நினைத்த மாத்திரத்தில் என்னை அருட்கயிற்றால் பற்றி இழுத்துக் கொண்டாய். உன்னருட் பெருமையை யாரே அறிய வல்லார்?*

*அருணை விஜய நாளை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் மதுரை மற்றும் திருச்சுழியில் இருந்து திரளான அன்பர்கள் ஆச்ரமத்திற்கு வருவது வழக்கம். இவ்வருடமும் அவ்வன்பர்கள் வழக்கம்போல் ஆச்ரமத்திற்கு வந்து அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று ‘அருணாசல அக்ஷரமணமாலை’ பாராயணம் செய்து அண்ணாமலையாரை வழிபட்டனர். ஆச்ரமத்தில் சிறப்பு அபிஷேகம் மற்றும் சிறப்பு அக்ஷரமணமாலை பாராயணமும் நடைபெற்றன.*

*இந்த நன்னாளில் பகவான் ரமண மகரிஷிகளின் சரிதம், உபதேசம், அன்பர்கள் நினைவுகள், பகவானுடன் நடந்த உரையாடல்கள், அன்பர்களின் கட்டுரைத் தொகுப்புகள், முன்னின்று வழிநடத்தும் பகவானது சாந்நித்யம் ஆகிய தலைப்புகள் அடங்கிய “Arunachala Ramana – Eternal Ocean of Grace” என்னும் 7 புத்தகங்கள் கொண்ட ஆங்கில நூல் வெளியிடப்பட்டது. இத்தொகுப்பு ஏறத்தாழ 3400 பக்கங்களையும் மற்றும் ஸ்ரீபகவானது மற்றும் அன்பர்கள், பகவான் சம்பந்தப்பட்ட சுமார் 350 புகைப்படங்களையும் உள்ளடக்கியது.*

*இப்புத்தகத் தொகுப்பினைப் பெற விரும்பும் அன்பர்கள் புத்தகாலயத்தை அணுகியோ அல்லது “bookstall@ramanaguru.org” என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்தோ*

*விவரங்களைப் பெறலாம். விலை. ரூபாய். 1200. (இந்தியா) (shipping and handling charges extra). மின்பதிப்பு (ebook) ரூ. 350*

## நவராத்திரி உற்சவம்

*ஒவ்வொரு ஆண்டும் நம் இந்தியத் திருநாட்டில் நவராத்திரி உற்சவம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பெறுவது வழக்கம். நவராத்திரி பூஜையை தெய்வங்களும், தேவர்களும்கூட செய்து பலன் பெற்றுள்ளனர். நாரதர் அறிவுரைப்படி ராமர் கடைப்பிடித்து ராவணனை அழித்து சீதையை மீட்டு வந்தார். கண்ணபிரான், சியமந்தக மணி காரணமாக அடைந்த அபவாதம் இப்பூஜை செய்ததால் நீங்கியது. பஞ்சபாண்டவர்கள் பாரதப் போரில் வென்றதும் இந்த பூஜை செய்ததால்தான். தீய சக்தி மேலோங்கும்போது காத்திட வேண்டினால் அம்பாள் சண்டிகையாக ஒன்பது கோடி வடிவங்கள் எடுத்து தீமையை அழித்து நன்மை செய்வாள் என தேவி மகாத்மியம் கூறுகிறது. நவராத்திரியில் 9 நாட்களும் பூஜை விரதம் அனுஷ்டிக்க வேண்டும். இயலாதவர்கள் அஷ்டமி நாளில் மட்டுமாவது விரதம் இருந்து பூஜை செய்யலாம். விஜயதசமி தினத்தில் அம்பிகை அசுரர்களை அழித்து வெற்றிவாகை சூடினாள். ஆணவம் சக்தியாலும், வறுமை செல்வத்தினாலும், அறியாமை ஞானத்தினாலும் வெற்றி கொள்ளப்பட்ட தினம் என்பதால் வீரம், செல்வம், கல்விக்கு உரிய தேவியரான துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி என முப்பெரும் தேவியர்க்கும் உரியதாக இதைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அன்றைய தினம் புதிதாகத் தொடங்கும் எல்லாக் காரியங்களும் எளிதாக வசமாகும் என்பது ஐதீகம்.*

*நம் வாழ்வின் இன்னல்களை நீக்கி, தேவியின் இன்னருளைப் பெற்றுத் தரும் வழிபாட்டு நியதிகளை சொல்லித் தருகிறது நவராத்திரி. நவராத்திரியின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வடிவில் அம்பாளை தியானித்து, பூஜித்து வழிபட வேண்டும் என்பது ஐதீகம்.*

*இத்தகு பெருமையும் சக்தியும் வாய்ந்த நவராத்திரி விழா வழக்கம்போல் இவ்வாண்டும் ஆச்ரமத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. அக்டோபர் 8-ஆம் தேதியன்று அன்னை யோகாம்பிகை மாத்ருபூதேஸ்வரர் சந்நிதியிலிருந்து ஊர்வலமாக வெளிக்கொணரப்பட்டு, கொலுமண்டபத்தில் வைக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்காரத்தில் அன்பர்களுக்கு அருள்பாலிப்பாள். 19-10-2017 மீண்டும் ஊர்வலமாக அன்பர்களால் சுமந்து செல்லப்பட்டு கர்பகிருஹத்தில் வைக்கப்படுவாள். ஒவ்வொரு நாள் பூஜையின்போதும் வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு ஆரத்திகள் நடைபெறும். ரமண அன்பர்கள் ஒவ்வொரு நாளும் பக்திப் பாடல்களை மனமுருகப் பாடுவர். சிறப்பு இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறும்.*

# ரமண கேந்திர செய்திகள்

## முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*முருகனார் 45-ஆவது ஆராதனை 9-9-2018 ஞாயிற்றுக்கிழமை அன்று இராமநாதபுரம் முருகனார் மந்திரத்தில் வழக்கம்போல் இவ்வாண்டும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. முருகனார் மந்திர காப்பாளர் திரு. சிரஞ்சீவி, ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார். மதுரை, உசிலம்பட்டி, திருச்சுழி ஆகிய ஊர்களிலிருந்து ரமண அன்பர்கள், உள்ளூர் ரமண அன்பர்களுடன் விழாவில் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். டாக்டர் சந்திரசேகரன் சிறப்புரையாற்றினார். அக்ஷரமணமாலை பாராயணம், சிறப்புப் பூஜைகளுடன் இறுதியில் அனைவருக்கும் பிரசாதம் அளிக்கப்பெற்றது.*

## ‘ரமணோதயம்’ – நன்கொடையாளர்கள்

*C. ஸ்ரீநிவாஸன், போரூர் ரூ.2000*

## ஸ்ரீ வெங்கட்ராமன் ('பிச்சு சித்தப்பா')



*'பிச்சு சித்தப்பா' என்று செல்லமாக அழைக்கப்பட்ட ஸ்ரீ வி. வெங்கட்ராமன் தனது 83-ஆவது வயதில் 30-7-2018 அன்று பகவான் பதமடைந்தார். அவர் பகவானின் தந்தை சுந்தரம் ஐயரின் இளைய சகோதரர் ஸ்ரீ சுப்பய்யரின் பேரனாவார். பகவானது சித்தப்பா சுப்பய்யரின் மதுரை இல்லத்தில்தான் ஜூலை 1896-இல் பகவானுக்கு மரண அனுபவம் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.*

*பகவானின் பரம பக்தரான பிச்சு சித்தப்பா அவர்கள், 25-12-1935-ஆம் ஆண்டு தேவகோட்டையில் பிறந்தார். பொருளாதார பட்டதாரியான இவர் இந்தியன் வங்கியில் 40 ஆண்டுகாலம் பணிசெய்து தலைமை மேலாளராக ஓய்வு பெற்றார்.*

*அவர் தனது 12-ஆவது வயதில் முதன்முதலாக பகவானை, ஸ்ரீரமணாச்ரமத்தில் தரிசித்தார். இளவயது முதல் இவர் கம்யூனிச சிந்தனைகளில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். பகவானிடம் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமத்துவமின்மையைப் பற்றிய சந்தேகங்களைப் பற்றிக் கேட்பதாக இருந்தார். ஆனால் அவரது அவரது தந்தை அதை அனுமதிக்கவில்லை. பகவானுடைய எளிமையும் சமநோக்கும் எல்லா உயிர்களிடத்தும் கருணையும் இவரை பகவான்பால் ஈர்த்தது. அவரது வாழ்க்கையின் போக்கில், எப்போது வேண்டுமானாலும் ஏழைகளுக்கு எதையாவது செய்ய வேண்டுமென்று அவர் எப்போதும் விருப்பப்படுவார். சக தொழிலாளர்கள் மற்றும் ரமண அன்பர்கள் இடையே எந்தப் பலனையும் எதிர்பாராமல் உதவி செய்வதில் நிஷ்காம்ய கர்மியாக விளங்கினார். இதுவே அவரது வாழ்வில் அவர் செய்த பெரும் சாதனை என்றுகூடக் கூறலாம்.*

*பகவானின் வாழ்க்கை மற்றும் போதனைகள் முடிந்தவரை பல மக்களுக்கு தெரிந்திருக்க வேண்டுமென வெங்கட்ராமன் விரும்பினார். ஏனெனில் அது அவர்களுக்கு நம்பிக்கையை அளிப்பதாகவும், அவர்களின் வாழ்வை சிறப்பாக மாற்றும் என்றும் நம்பினார். அவர் பகவானைப் பற்றிய புத்தகங்களைப் பற்றி ஆர்வமுள்ள ஒரு வாசகர் ஆவார். பகவானின் வாழ்க்கை புத்தகங்களையும், ரமண பக்தர்களையும், பகவானைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்பும் மக்களுக்கும் அவர் பரிசுப் புத்தகங்களை அளிப்பார்.*

*அவர் சென்னை நங்கநல்லூரில் அமைந்துள்ள மாடர்ன் மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களிடையே பகவானது அக்ஷரமணமலை பாராயணத்தை பிரபலப் படுத்துவதில் திரு. சுப்ரமணியம், திரு. ராமமூர்த்தி அவர்களுடன் சேர்ந்து முக்கிய பங்காற்றினார். இப்பள்ளி மாணாக்கர்கள் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 1-ஆம் தேதி பகவான் அருணை விஜய தினத்தை அக்ஷரமணமாலை பாராயணத்துடன் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள்.*

*எவரிடத்தும் பேதமின்றி அன்பு செலுத்திய இவரது சீரிய குணத்தை அனைத்து ரமண அன்பர்களும், நண்பர்களும் அவரது இல்லத்தில் நடந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் கண்ணீர் மல்க நினைவு கூர்ந்தனர். அன்னாரது குணங்களான நிஷ்காம்ய கர்மம், பேதமற்ற அன்பு இவ்விரண்டுமே அன்னாரை ஐயமின்றி பகவானிடம் நிலைபெறச் செய்திருக்கும். அன்னாரைப் பிரிந்து வாடும் அனைவருக்கும் 'ரமணோதயம்' ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

# ரமண கேந்திரா டிரஸ்ட் சென்னை

## ஸ்ரீபகவான் 139ஆவது ஜயந்தி நாள்

*திங்கட்கிழமை, டிசம்பர் 24, 2018*

*இடம்: 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர்*

*நிகழ்ச்சி நிரல்*

காலை

| | |
|---|---|
| *6.00 a.m.* | மங்கள இசை/நாதஸ்வரம் |
| *7.00 a.m.* | மஹன்யாசம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம் |
| *10.00 a.m.* | ஸ்ரீ ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை |
| *10.45 a.m.* | தமிழ்ப் பாராயணம்: “அக்ஷர மணமாலை” |
| *12.15 p.m.* | அன்னதானம், தீபாராதனை |

மாலை

| | |
|---|---|
| *4.00 p.m.* | விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் |
| *4.30 p.m.* | திரு. ஸ்ரீகிருஷ்ணா அவர்களின் உரை |
| *5.30 p.m.* | ஹரிகதா, ஸ்ரீமதி. சியாமளா ராமச்சந்திரன் |
| *6.45 p.m.* | மயிலை மாடவீதிகளில் ஸ்ரீபகவான் திருவுருவப் படம் வீதியுலா |
| *7.15 p.m.* | “அக்ஷரமணமாலை” கூட்டுப் பாராயணம், தீபாராதனை |

# ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

## ஸ்ரீபகவான் 139ஆவது ஜயந்தி விழா

**இடம்: 6, ராஜேந்திரபிரசாத் சாலை, நேருநகர், குரோம்பேட்டை**

*திங்கட்கிழமை, டிசம்பர் 24, 2018*

*நிகழ்ச்சி நிரல்*

முற்பகல்

| | |
|---|---|
| *7.00* | மங்கள இசை |
| *8.00* | வேதபாராயணம், ரமண அஷ்டோத்ர பூஜை |
| *9.30* | திருவாசக செந்நாவலர் திரு. சத்குருநாத ஓதுவார் (மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயில்) அவர்களின் ரமண சந்நிதிமுறை பண்ணிசை |
| *11.00* | அக்ஷரமணமாலை, புனர்வசு வண்ணம் பாராயணம் |
| *11.30* | ஆரத்தி, சிறப்பு விருந்து (பிரசாதம்) |

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ........ | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ........ | 9940418375 |
| **குரோம்பேட்டை,** *ரமணாலயம்* | ........ | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | ........ | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | ........ | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ........ | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| **புதுச்சேரி** *ரமண கேந்திரம்* | ........ | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | ...... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | ........ | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | ....... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | ........ | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | ........ | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | ........ | 9486576687 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



45 ஆவது முருகனார் ஆராதனை விழா
ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை



Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

